PHONE No. 3249 மலாய் 10-சதம் பர்மா 0-1-6 இலங்கை 7-சதம்

TAMIL MANI REGD. NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 6
ஓசை 11

சென்னை—விக்கிரம-ஹு தைமீ 6உ ஞாயிற்றுக்கிழமை (19—1—41)

விலை
ஒரு அணா

ஆசைக்கு அளவில்லை!

ஆசைக்கு ஓர் அளவு இல்லை; இந்த அகிலமெல்லாம் கட்டி ஆண்டாலும், கடல்மீதும் ஆதிக்கம் செய்ய வழி இல்லையே யென்ற ஏக்கமே ஏற்படும். இது உலக இயற்கை. அந்த ஏக்கந்தான் இன்று ஹிட்லருக்கும் ஏற்பட்டிருக்கிறது; ஐரோப்பாவில் பெரும் பாகத்தை ஜெயித்து விட்டார்; இங்கிலாந்துமீது இன்னமும் படையெடுத்துக்கொண்டே இருக்கிறார்; அதே சமயத்தில் பால்கன் நாடுகளை வஞ்சித்துப், பால்கன் நாடுகள் மூலம் மத்திய தரக் கடலைக் கைப்பற்றி, அங்கிருந்து எகிப்துக்குப் பாய்ந்து, எகிப்து மூலம் உலகத்தை ஜெயித்துவிட அவர் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்! ஹிட்லர் மனக்கோட்டை உருப்படுமா? அவர் எகிப்தில் காலெடுத்து வைக்க முடியுமா? அவர் யோசனை உருப்படாது; அவர் மனக்கோட்டை இடிந்து தகர்ந்து, உதிர்ந்துபோவது நிச்சயம்; இதை இந்த யுத்தப் போக்கே நன்கு காட்டி வருகிறது.

சொக்கநாதன்

தொடர் கதை

மாய வெளிச்சம்!

தஞ்சை இளவரசி மோகனா, கமலம் முதலியவர்களுடன் பேசிக்கொண்டிருந்த மாய சேவகன், அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு நந்தவனத்தை நோக்கி நடந்தான்; நந்தவனத்தில் பயங்கரமான சப்தம் கேட்டு, அங்கு துள்ளிப் பாய்ந்து சென்றான். மறைவான ஓரிடத்தில் பதுங்கியிருந்து கவனித்தான். அந்நேரத்தில் பழைய மண்டபத்திலிருந்து இரு தடியர் பயந்து, கூச்சலிட்டு, விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தனர். அவர்கள் அரண்மனைக்குச் செல்லும் வாசலருகில் வந்ததும், சிறிது பயந் தெளிந்து, அங்கு சொற்ப நேரம் பேசிக்கொண்டிருந்தனர். பழைய மண்டபத்தில் ஒரு பிரேதம் கிடந்ததாகவும், அதைப்பற்றி உடனே அரசருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால், அரண்மனைக்குள் செல்லவோ அவர்களுக்குத் தைரியம் வரவில்லை; என்றாலும். துணிந்து உள்ளே சென்றனர்; பூனைபோல் பதுங்கிப் பதுங்கிச் சென்று, ராணியின் அறையை நெருங்கினர். அந்த இருவரில் ஒருவனாகிய அங்கப்பன் ராணி அறைக்குச் சென்றான். மற்றவன் ஓரிடத்தில் பதுங்கி இருந்தான். அங்கப்பன் ராணியிடம், பழைய மண்டபத்தில் கிடந்த பிரேதத்தைப்பற்றிச் சொன்னான். ராணி திடுக்கிட்டுப் போனாள்; அந்தப் பிரேதம் ஒரு பெண்ணின் பிரேதமெனக் கேள்விப்பட்டதும், ராணி ரொம்பவும் பயந்து போனாள். உடனே அந்தப் பிரேதத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி, அங்கப்பனிடம் சொன்னாள். அங்கப்பனுக்குத் தைரியம் ஏற்படவில்லை. அப்பொழுதும் அவன் நடுங்கிக் கொண்டிருந்ததால், ராணி, ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு அங்கப்பனுடன் புறப்பட்டாள்; அங்கப்பனும், அவனுடன் வந்திருந்த ஒற்றனும் ராணியுமாக பழைய மண்டபத்துக்குச் சென்றனர். அங்கு ராணியே முதலில் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றாள்; பிரேதம் கிடந்ததாகச் சொன்ன இடத்தைக் கவனித்தாள். அங்கு பிரேதம் எதையும் காணவில்லை; மண்டபமெல்லாம் தேடிப் பார்த்தாள்; பிரேதத்தைக் காணவே இல்லை. ராணி, அங்கப்பனைக் கவனித்தாள்; அங்கப்பன் ராணியைக் கவனித்தான்; அங்கப்பன் முகத்திலும், ஒற்றன் முகத்திலும் அசடு தட்டியது. மூவரும் ஏமாந்து போயினர்.

காணாமற்போன பிரேதத்தைக் கொலைசெய்த சதிகாரரோ, எங்காவது எடுத்துச் சென்று மறைத்து வைத்திருக்கக் கூடுமென ஒற்றன் ஒரு யோசனை சொன்னான். ராணி அதை நம்பினாள். ஆகவே, நந்தவனத்தின் இதர இடங்களில் அந்தப் பிரேதத்தைத் தேடிக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் மூவரும் பழைய மண்டபத்தின் படிக்கட்டுகளில் இறங்கி வந்தனர். அந்நேரத்தில் அவர்களுக்குப் பின்புறமாகக் கிரீச் சென்று ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது; அவ்வளவுதான்; விளக்கைக் கையில் வைத்திருந்த ராணி, நடு நடுங்கினாள்; கையிலிருந்த விளக்கு, அவளையும் அறியாமலேயே பொத்தென்று கீழே விழுந்து அணைந்தது. எங்கும் இருள்; ராணியும், அங்கப்பனும். ஒற்றனும் குலை நடுங்கத், தட்டுத் தடுமாறிப் படிகளில் இறங்கி ஓட்டமெடுத்தனர்.

ஓடியவர்கள் முன்பின் பார்க்கவில்லை; ஒற்றனே மூவரிலும் முந்திக் கொண்டான். அங்கப்பன், அவன் சகோதரி ராணியைக்கூடக் கவனிக்கவில்லை. அவன் உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்துடன் அரண்மனை வாசலை நோக்கி ஓடினான். ராணிக்கு அவ்வளவு வேகமாக ஓட முடியவில்லை; சற்று தூரம் ஓடியதும், சோர்ந்துபோய் ஒரு மரத்தடிக்குச் சென்று, அந்த மரத்தைப் பிடித்துக்கொண்டு நின்றாள். அவளால் நிற்க முடியவில்லை; மூச்சுத் திணறியது. கரங்கள் நடுங்கின; பயத்தால் பழைய மண்டபத்தை மீண்டும் நோக்கினாள்; அங்கு திடீரென ஒருவிதத் தீப்பற்றியெறிந்தது. தீ எவ்வளவு சடுதியில் தோன்றியதோ, அவ்வளவு துரிதத்தில் தீயும் அணைந்தது. ராணிக்கு இருந்த பயம் அதிகரித்தது; அவள் கால்கள் தள்ளாடின; ஓட முடியாமல் சோர்ந்து போய் அந்த மரத்தடியிலேயே தொப்பென்று விழுந்து மூர்ச்சையானாள்.

ராணியைக் கைவிட்டு ஓடிய அங்கப்பனும், ஒற்றனும் அரண்மனை வாசலுக்கருகில் போய் நின்று கொண்டு ராணியை எதிர்பார்த்தனர்; ராணியோ வரவில்லை. பழைய மண்டபத்தில் எரிந்த தீ அவர்கள் கண்ணிலும் பட்டது. ராணி வராததால், அவளை அந்தப் பேய் அடித்துக் கொன்றிருக்க வேண்டும்; இன்றேல், பயந்து, அவள் எங்கேயாவது விழுந்திருக்க வேண்டுமென்று நினைத்தனர். ராணியைத் தனிமையாக விட்டுச் செல்ல அங்கப்பன் மனம் இடங்கொடுக்கவில்லை; அவன் ஒற்றனைத் தூண்டினான்; ராணியை எந்தவிதத்திலும் தேடிப் பார்த்து வரும்படி சொன்னான். ஒற்றன், அங்கப்பனுக்குமேல் சூரன்! அங்கப்பன் துணைக்கு வராமல், அவனால் தனிமையாகப் போக முடியாதென்று தெரிவித்து விட்டான்.

"நான் தனிமையாக எப்படிப் போக முடியும்... அந்தப் பேய்... பேய்!..."

"சனியனே! பேயுமில்லை...இழவுமில்லை! ராணியைப்போய்ப்பார்த்துவிட்டுவா...ராணி உயிருக்கு ஆபத்து வந்தால் நமது தலையே போய் விடும்..."

"பேயுமில்லை; இழவுமில்லையென்றால், நீங்களும் என்னுடன் வருவது தானே?...ராணி உங்கள் சகோதரியல்லவா?...அவர்கள் உயிரைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் முதல் கடமை அல்லவா?..."

"மெய்தான்...ராணியைக் காணோமே!...அதோ பார்த்தாயா?...மீண்டும் தீ!... அந்தப் பேய்!..."

"மீண்டும் தீயா?...அந்தப் பக்கமே பார்க்கவேண்டாம்...வாருங்கள் போவோம்...ராணியம்மா வேறு வழியாக அரண்மனைக்குள் போயிருக்கக் கூடும்..."

"அட முண்டமே! அரண்மனைக்குள் போக இந்த வழியைத் தவிர வேறு வழி கிடையாது..."

"இல்லை...ஏதோ அந்தரங்க வழிகள் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்....அந்த வழி ராணிக்குத் தெரிந்திருக்கலாம்..."

"அந்தரங்க வழியாவது, சனியனாவது...அப்படி ஒன்றும் கிடையாது; ராணிக்கும் அந்த வழிகள் தெரியாது...அந்த வழிகள் தெரிந்திருந்தால்...ராணி நம்மை அப்பொழுதே அந்த வழியாக அழைத்துச் சென்றிருக்க மாட்டார்களா?..."

"ராணியம்மா நம்முடன்தானே ஓடி வந்தார்கள்...அதற்குள் எங்கே போய்விட்டார்கள்?.....இது மாயமாகத்தானிருக்கிறது!..."

"நம்முடன் ஓடிவந்த ராணி களைத்துப்போய், அல்லது, கால் இடறி எங்கேயாவது விழுந்திருக்கலாம்...வா போய்ப் பார்த்து வரலாம்.....துணிந்துவா......ராணிக்கு ஆபத்து வரக்கூடாது...என் அக்காளுக்கு ஆபத்து வந்தால், அப்புறம் நம்முடைய நிலைமை அவ்வளவு தான்..."

"அந்தப் பேய் இன்னமும் இருந்தால்?..."

"எந்தப் பேய்?...அந்தப் பேய் போயிருக்கும்...இப்பொழுது வெளிச்சமில்லை பார்த்தாயா?...வா போகலாம்..." என்றான் அங்கப்பன். ஒற்றனுக்கோ மனமில்லை; என்றாலும், வேண்டா விருப்பாக அங்கப்பனுடன் சென்றான். அவர்கள் இருவரும் அடிமேல் அடியெடுத்து வைத்து, மீண்டும் பழைய மண்டபத்தை நோக்கி நடந்தனர். ராணி விழுந்து கிடந்த மரத்தினருகில் சென்றதும், பட பட வென்று அடிக்கும் சப்தம் கேட்டு, அப்பாடா என்று துள்ளிப் பாய்ந்தான் ஒற்றன்! ஒற்றன் துள்ளிப் பாய்ந்த வேகத்தைக் கண்டான் அங்கப்பன். "ஐயோ...பேய்...பேயா? இங்கும் வந்து விட்டது!" என்று உளறிக் கொண்டே இருவரும் ஒருவரையொருவர் தள்ளிவிட்டு, வேகமாக ஓடினர். இதே சமயத்தில் பழைய மண்டபத்திலிருந்தும் மூன்றுமுறையாக அந்த மாய வெளிச்சம் தோன்றியது. அது மட்டுமல்ல; அந்த வெளிச்சம் அவர்கள் சமீபத்தில் நெருங்கி வருவதுபோல் தெரிந்தது. அங்கப்பனும், ஒற்றனும், தலைகால் தெரியாமல் வேலைக்காரர் இருக்கும் குடிசைகளை நோக்கி ஓட்டமெடுத்தனர்; திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. வேலைக்காரரிருக்கும் குடிசைகளின் அருகில் சென்ற பின்தான், அங்கப்பன் ஒரு குடிசையின் ஓரத்தில் சென்று நின்றான். கை கால்கள் நடுங்கக் குடிசையின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தான். அவனுடன் ஒற்றனும் வந்து சேர்ந்தான். ஓடி வந்த வேகத்தில் பேச முடியாமல் அவர்கள் முகத்தில் கொட்டிய வியர்வையைத் துடைத்துக்கொண்டிருந்தனர்.

நந்தவனத்தில் தங்கியிருந்து ராணியைத் தேடிப் பிடிக்கும் எண்ணம் ஒற்றன் மனதிலிருந்தே மறைந்தது. ராணி எக்கேடு கெட்டாலும் பாதகமில்லை; அவன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு, நந்தவனத்திலிருந்தே போய்விட எண்ணினான். ஆனால், தனிமையாகச் செல்லப் பயந்தான். அங்கப்பனை அங்கு தனிமையாக விட்டுச் செல்லவும்' யோசித்தான்; அங்கப்பனைப் பகைத்துக் கொண்

(15-ம் பக்கம் பார்க்க)

ஆப்ரேஷனை நீக்குங்கள்

தொண்டையில் உள் நாக்கின் இரு பக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களை

"டான்ஸ்லிட்"

அற்புதமாய்க் குணப்படுத்தும்

விவரங்களுக்கு:— ஆலன்கிலினிக்

இராயப்பேட்டை, மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்.



மனோரதம்

வினையின் பயன்!

படமுடியாது இனித் துயரம்!

உடம்பு வேண்டாம்!

ஏழரை நாட்டுச் சனி!

—: எரிமலை வெடிக்குமா ? :—

வினை விதைத்தவன் வினை யறுப்பான் என்ற சொல் வீண்போகாது. ஹிட்லரும், முஸோலினியும், அவர்களுடைய சகாக்களும் என்ன வினை செய்தார்களோ, அந்த வினையின் பயனை இன்று அனுபவிக்கிறார்கள். முஸோலினி, இதாலியில் "இரும்புக் கை" ஆட்சி நடத்தினார்; அவர் இரும்புக் கை ஆட்சிக்கு முடிவு காலம் வந்துவிட்டது. முஸோலினியின் கை முறிந்து, அவர் ஆணவமும் அடங்கி வருகிறது. முஸோலினியே, ஹிட்லரிடம் போய் சரணாகதியடைந்துவிட்டார். இதாலியில் முஸோலினிக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வருகின்றன டூரின், மிலான், ஜெனோவா, பிளாரன்ஸ் முதலிய முக்கியமான நகரங்களிலெல்லாம் முஸோலினிக்கும், அவருடைய பாஸிஸ்ட் கட்சியினருக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். முஸோலினியால் பட்ட துயரங்கள்போதும்; இனிபட முடியாது இந்தத் துயரங்கள் என்று பகிரங்கமாகக் கூறி வருகின்றனர் பாஸிஸ்ட் ராணுவங்களுக்கும், அதை எதிர்ப்பவர்களுக்கும் தினசரி கைகலப்பு நடந்து வருகிறது! நாலா பக்கங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் பறக்கின்றன! போஸ்டர்களையும் ஏராளமாக ஒட்டி வருகிறார்கள். "பாஸ்டா" என்பதற்கு இதாலியில் "போதும்" என்பது பொருள். இந்தத் துயரங்கள் போதும்; அதாவது முஸோலினி ஒழிந்தாலே போதும் என்று பிரசாரஞ் செய்துவருகிறார்கள். அந்தப் பிரசாரமும் ரொம்ப மும்முரமாக நடந்து வருகிறது.

ஃ ஃ ஃ

இதற்கெல்லாம் காரணம் என்ன? இதாலியின் தோல்வியே காரணம். கிரீஸ்மீது படையெடுத்துச் சென்ற இதாலி, கிரீஸில் மட்டுமல்ல, அல்பேனியாவிலும் தோல்வியடைந்து வருகிறது. ஆப்ரிக்காவில் இதாலிக்குப் படுதோல்வி; அங்குள்ள இதாலிப் பிரதேசங்களில் மூன்றில் இரு பாகத்தை இழந்து விட்டனர்; அங்கு என்ன நடக்கிறதென்பதே இதாலியருக்குத்தெரியாது. ராணுவ அதிகாரிகளிடமிருந்தோ, அல்லது, ராணுவ சோல்ஜர்களிடமிருந்தோ இதாலிக்கு எந்தவிதமான செய்தியும் கிடையாது. ஐரோப்பாவிலும், ஆப்ரிக்காவிலும், இதாலிக்குத் தோல்விமேல் தோல்வி கிடைத்து வருகிறதே யொழிய, இதாலியருக்கு நம்பிக்கையான செய்தி எதையும் காணோம். இந்த அவதியில் பிரிட்டிஷ் விமானங்கள் இதாலி நகரங்கள்மீது வெடிகுண்டுகளை சரமாரி பொழிந்து கொண்டிருக்கின்றன. நாலா பக்கங்களிலும், பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களின் முழக்கம் மும்முரமாக இருக்கிறது. இதாலியருக்கு மரணத்தைத் தவிர வேறு புகலிடமில்லை; ஆகவே, மரணத்தின் அறிகுறியாக மண்டையோடுகளையும், கை எலும்புகளையும் காட்டி, அதன் நடுவில் "எம்" என்ற பெரிய எழுத்தைப் போட்டும் போஸ்டர்கள் அடித்துப் பிரசாரம் செய்கின்றனர். "எம்" என்றால் முஸோலினி; "எம்" என்ற தலையெழுத்துள்ள "மார்டே" என்ற இதாலி வார்த்தைக்கு மரணம் என்று பொருள். அதாவது, முஸோலினி என்றால் மரணம்! முஸோலினிமீது மக்களுக்கு அவ்வளவு வெறுப்பு! முஸோலினியை மரணத்துக்கு ஒப்பிட்டுக் கண்டிருக்கின்றனர். மரணத்துக்கு ஒப்பான அந்த முஸோலினி ஒழிந்தால் போதுமென்று நினைக்கின்றனர்!

ஃ ஃ ஃ

இதாலியின் தோல்விமட்டுமல்ல; அங்கு பணப் பஞ்சம், ஆகாரப் பஞ்சமும் மிஞ்சிவிட்டது. இதாலி மக்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் இதைச் சகித்துக்கொண்டிருப்பார்கள்? முஸோலினியும், ஹிட்லரும் தொலைந்து, இந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தால் பெரிய புண்ணியமாக இருக்குமென்று இதாலியர் கூறுகின்றனர். பிரிட்டிஷ் விமானங்கள் படையெடுத்துச் சென்றால், இதாலியர் கூறுவதும் இதுதான். பிரிட்டிஷார் ஜெயிக்கவேண்டுமென்றே பெரும்பான்மையான இதாலியர் பிரார்த்திக்கின்றனர்! முஸோலினி மீதுள்ள துவேஷமே இதற்குக் காரணம். ஹிட்லரிடம், முஸோலினி சரணாகதியடைந்ததால், ஜெர்மன் ராணுவங்கள் இதாலிக்குள் ஏராளமாக வந்திருக்கின்றன அந்த ராணுவங்களைக் காணும் இதாலியருக்கு வெறுப்பே அதிகரித்து வருகிறது. ஜெர்மானியருடன் ஒத்துழைக்கவேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை இந்த நிலைமையில் இதாலி தோல்வியடைந்தால் நல்லதென்றே நினைக்கின்றனர். ஜெர்மானியர் இதாலியருக்காகப் போராட வேண்டாம்; அவர்கள் இதாலியிலிருந்து போய்விட்டால் இதாலியாவது இதாலியருக்கு மிஞ்சுமென்று நினைக்கின்றனர். அச்சு நாடுகள் வெற்றிபெற்றால்கூட, இதாலி ஜெர்மனியிடமிருந்து மீளுமா என்ற சந்தேகம் வலுத்து வருகிறது! உடும்பு வேண்டாம், கையைவிட்டால் போதுமென்று இதாலியர் நினைக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள்! ஜெர்மானியருக்கு அடுத்தாற்போல் பலியாகக் கூடிய தேசம் இதாலியே என்ற சந்தேகம் வலுத்து வருகிறது. இதாலி இன்று இருக்கும் நிலைமையில் அதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

ஃ ஃ ஃ

நெருக்கடியான இந்த நிலைமையில் முஸோலினி மீண்டும் இதாலியில் ஆட்சி செய்ய முற்படுவாரா? சந்தேகந்தான். ஆனால், முஸோலினியின் பிடி இதாலியில் பலமாகஇருக்கிறது. அவரை எளிதில் ஒட்டிவிட முடியாது. அவருடைய இரும்புப் படைகளைக் கொண்டு, அவர் இதாலியை அடக்க முற்படலாம். ஆனால், இந்த யுத்தத்தில் அவர் ஜெயிப்பார் என்று சொல்ல முடியாது. யுத்தம் முடிந்தால், அல்லது, அச்சு நாடுகள் தோற்கடிக்கப்பட்டால், முஸோலினி ஒருவேளை ஊரைவிட்டு ஓடலாம்; அதுவரையில் அவருடைய பிடியைத் தளர்த்தமாட்டாரென்றே தெரிகிறது. ஹிட்லருடன், முஸோலினி உறவாட ஆரம்பித்த காலத்திலேயே இதாலியர் அந்த உறவை

(அடுத்த பக்கம் பார்க்க)



ஹிட்லருக்கும், ஸ்டாலினுக்கும் கொள்கையில் வெகு தூரம். என்றாலும், அவர்கள் இருவரும் இன்று நெருங்கிப் பழகி, ஒப்பந்தஞ் செய்துகொள்ளுகிறார்கள். இதில் அடங்கியிருக்கும் அந்தரங்கமென்னவென்பது தெரியவில்லை.

முஸோலினி, ஹிட்லருடன் உறவாடிய பலன் என்ன? இதாலியை ஹிட்லருக்கு அர்ப்பணஞ்செய்தது தான் முஸோலினி கண்ட பலன் இதாலியில் நாஜி ஜெர்மானியர் கை ஓங்கி வருகிறது.

முக்கோண அச்சில் கட்டுப்பட்டிருக்கும், ஜெர்மனி, இதாலி, ரோம். இந்த மூன்று தேசங்களுக்குள்ளேயே உலகத்தைப் பங்கு போட்டுக்கொள்ள சர்வாதிகாரிகள் நினைக்கின்றனர். ஆனால், அவர்கள் யோசனை உருப்படுமா? இதாலி திண்டாடுகிறது. ஜப்பான் பதுங்கி வருகிறது. ஜெர்மனி கதி என்னவாகுமோ பொறுத்துப் பார்ப்போம்.

கைத்தறி ஜவுளிகளில் சிறந்தது.
N. K. M. தங்கநாடா Regd 4577
எல்லா சுதேசி ஜவுளி வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
N. கருப்பண முதலியார், சுதேசி ஸ்டோர்,
53, கிடங்கு தெரு, மதராஸ். (தலைமை ஆபீஸ்:-ஈரோடு. பிராஞ்சு:-வேலூர்

வெறுத்தனர். இதாலிக்கு கேடுகாலம் வந்துவிட்டது; இதாலியை ஏழரை நாட்டுச் சனியன் தொடர்ந்துவிட்டதென்று இதாலியிலுள்ள முதியோர் ஜோசியங் கூறினார்கள்! முஸோலினியின் போக்கை அவர்கள் ஆரம்பத்திலேயே கண்டித்துவந்தனர்; ஆனால், இளங் கன்றுகளாகிய இதாலியரே முஸோலினியை ஆதரித்தனர்; அவர்கள் அப்பொழுது பயமறியவில்லை; ஆனால், இன்று அவர்களே பெரும்பாலும் போர்முனைகளில் பலி கொடுக்கப்படுகின்றனர்; இன்றுதான் அவர்கள் உண்மை நிலைமையை உணருகின்றனர். முஸோலினி, இதாலி மக்களை எத்தகைய படுகுழியில் கொண்டு போய்த் தள்ளிவிடுவாரோவென்று அஞ்சுகின்றனர். இந்தச் சமயத்தில் அவர்களால் என்ன செய்ய முடியும்? போரில் இறங்கியாகிவிட்டது; இரண்டிலொன்று பார்த்துத்தான் தீரவேண்டும் என்ற எண்ணத்துடன் போராடி வருகின்றனர். மான ரோஷத்துக்கு அஞ்சி அவர்கள் போராடுகின்றனரே யொழிய, இந்த யுத்தத்தில் ஜெயித்துவிடலாமென்ற நம்பிக்கை அவர்களுக்கு அறவே கிடையாது. வெற்றியில் நம்பிக்கையோ, உறுதியோ இல்லாத ஒரு ராணுவம், என்ன போராடித்தான் என்ன பயன்? அதனால் வெற்றி கிடைத்துவிடாது.

ஃ ஃ ஃ

இதாலியின் ராணுவ அதிகாரிகள் கூட முஸோலினிமீது பாய்கின்றனர்! அவருடைய மூர்க்கப் பிடிவாதமே இந்த யுத்தத்துக்குக் காரணமென்று சொல்லுகிறார்கள். ஹிட்லருடன் சேர்ந்து இந்த யுத்தத்தில் இறங்கவேண்டாமென்று சொல்லியும் கேளாமல் முஸோலினி இந்த யுத்தத்தில் இறங்கினார். அதனால், முக்கியமான ராணுவ அதிகாரிகள் அவர்களுடைய பதவிகளை ராஜிநாமா செய்து விட்டனர். அது மட்டுமா? பகிரங்கமாக முஸோலினியை எதிர்க்கத் துணிந்திருக்கின்றனர். ஜெர்மனியிடமிருந்து இதா

ம னோ ர த ம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

லிக்கு எந்த நிமிஷத்திலும் ஆபத்து வரலாமென்று அவர்கள் பயப்படுகிறார்கள். ஹிட்லர் ஆஸ்திரியாவைக் கைப்பற்றியபோதே இதாலியில் அந்தப் பயம் ஏற்பட்டிருந்தது அதன்பின் பிரன்னர் கணவாய் வழியாகவும் அந்த ஆபத்து வரலாமென்று சொன்னார்கள். பிரான்ஸ் வீழ்ச்சி, இதாலிக்குத்தான் முதல் ஆபத்து! ஆகவே, பிரன்னர் கணவாயைக் கைப்பற்றி, அதைப் பாதுகாக்க வேண்டுமென இதாலியிலுள்ள பெரிய ராணுவ கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த யுத்தத்தில் இதாலி செய்யவேண்டிய காரியம் ஒன்றே. அபிசீனியாவையோ, அல்பேனியாவையோ, அல்லது வட ஆப்ரிக்காவையோ, இதாலியர் மறந்துவிட வேண்டும்; அங்குள்ள ராணுவங்களை யெல்லாம் உடனே இதாலிக்குத் திருப்பி வரவழைத்துவிட வேண்டும்; அந்த ராணுவங்களில் 80 டிவிஷன் ராணுவங்களைப் பிரன்னர் கணவாய்க்கு அனுப்பி, இதாலியைப் பாதுகாக்கவேண்டும் இதுவே இதாலியின்முக்கிய கடமை. இதுவே இதாலியைப் பாதுகாக்க வேண்டும்; அதாவது, ஜெர்மன் ஆக்ரமிப்பிலிருந்து இதாலி தப்பிப் பிழைத்தால் போதும் என்று இதாலி ராணுவ நிபுணரான மார்ஷல் படாக்ளியோ சொல்லுகிறார்.

ஃ ஃ ஃ

இதாலி இன்று ஒரு எரிமலை மீது இருந்து கொண்டிருக்கிறது! இதாலி மக்கள் குமுறிக் கொண்டிருக்கின்றனர்; அந்த எரிமலை என்று வெடிக்குமோ சொல்ல முடியாது. இதாலி குமுறிக், கொந்தளிக்குமேயானால், அங்குள்ள ஜெர்மன் ராணுவங்களுக்கும் ஆபத்து ஏற்படுவது நிச்சயம். தற்போது, இதாலியின் பல பாகங்களில் ஜெர்மன் ராணுவங்களிருக்கின்றன. இதாலியின் கோடியில், அதாவது, மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்திலுள்ள ஸிஸிலித் தீவிலும் ஏராளமான ஜெர்மன் ராணுவங்களும், ஜெர்மன் விமானங்களும் இருக்கின்றனவெனத் தெரிகிறது. ஸிஸிலித் தீவில் இருந்துகொண்டு ஜெர்மன் ராணுவங்களும், பிரிட்டிஷ் விமானப்படைகளும், பிரிட்டிஷ் விமானங்களையும், கடற்படைகளையும் தாக்கிவருகின்றன. அட்ரியாடிக் கடலிலும், ஜெர்மன் ராணுவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், இதாலிக்குத்தான் கேடு. இதாலியை ஜெர்மன் ராணுவங்கள் சூழ்ந்து கொண்டால், இதாலி இனிமேல் ஜெர்மனியின் பிடியிலிருந்து தப்பிவிட முடியாது; இதாலி, பிரிட்டனிடமும், கிரீஸிடமும் தோல்வியடைந்தால்கூடப் பாதகமில்லை; இதாலியை இதாலியர் இழந்து விட மாட்டார்கள். ஆனால், ஜெர்மானியர் இதாலியைக் கைப்பற்றுவார்களேயானால், இன்று, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, போலந்து முதலிய நாடுகள் எந்த நிலைமையிலிருக்கின்றனவோ அதே நிலைமைக்குத்தான் இதாலியும் வந்து சேரும். இதாலியைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்து, பிரிட்டனை எதிர்க்க ஹிட்லர் யோசனை போடலாம். இது ஆபத்தான யோசனை! இதாலிக்கு ஹிட்லரின் உபகாரம் வேண்டாம்; உபத்திரமில்லாமலிருந்தால் போதும் என்பதை உணர்ந்து, இதாலியர் இப்பொழுதே ஜெர்மானியரை வெருட்டி யடித்தாலொழிய, இதாலிக்கு ஆபத்து நிச்சயம். சிறு ஆபத்து அல்ல; பெரிய ஆபத்து. இதாலியே அடியோடு நாசமாகக் கூடிய ஆபத்து இன்று இதாலியைச் சூழ்ந்து நிற்கிறது.

ஃ ஃ ஃ

இதாலிமீது கண்ணோட்டம் வைத்திருக்கும் ஹிட்லர், பால்கன் நாடுகளையும் கலக்கி விட்டுக் கொண்டே இருக்கிறார். பால்கன் நாடுகளாகிய ஹங்கேரி, பல்கேரியா முதலிய நாடுகளைச் சிண்டு முடிந்துவிடுகிறார். யுகோஸ்லாவியாவைப் பயமுறுத்தி வருகிறார். பால்கன் நாடுகள் ஒருமுடிவுக்கும் வரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. தத்தளிக்கும் இந்த நிலைமைதான் ஹிட்லருக்கு ரொம்ப அனுகூலமான காலம். திடீரென அந்நாடுகள்மீது ஹிட்லர்பாயலாம்! ருமேனியாவிலும், ஹங்கேரியிலும் ஏராளமான, அதாவது, சுமார் 15, 16 டிவிஷன் ஜெர்மன் ராணுவங்களிருப்பதாகக் கேள்வி. அந்த ராணுவங்களைக் கொண்டு அவர் கிரீஸ்மீது படையெடுக்கலாம். பல்கேரியாவுக்கும் ஏராளமான ராணுவங்களை அனுப்பி, அங்கிருந்து கொண்டு துருக்கியைத் தாக்கலாம். கருங்கடலிலும் ஹிட்லர் அவருடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிப்பார். கருங்கடலுக்கு ஆபத்து வந்தால் ரஷியாவுக்கும் ஆபத்து. ஆனால், ரஷியா இந்த ஆபத்தை அறிந்திருந்தும, ஜெர்மனியுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்திருப்பதுதான் பெரிய விந்தை! ரஷியாவின் போக்கைக் கவனித்தால் அது ஜெர்மனியுடன் ஏதேனும் அந்தரங்க ஏற்பாடுகள் செய்திருக்கிறதோவென்ற சந்தேகம் ஏற்படுகிறது. ரஷியாவுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ பல்கேரியாவுக்குள்ளும் ஜெர்மன் ராணுவங்களும், ஒற்றர்களும் நூற்றுக் கணக்கில் மாறுவேடங்களில் போய்க்கொண்டிருக்கிறார்களென சமீபத்தில் செய்தி கிடைத்திருக்கிறது!

ஃ ஃ ஃ

ரஷியா, ஜெர்மனியுடன் இவ்வித உறவு கொண்டாடுவதற்குப் பிரிட்டன்தான் காரணம். பிரிட்டனின் மந்தப் புத்தியும், ஆமை வேகமுமே, ஜெர்மனியுடன் உறவு கொண்டாட ரஷியாவைத் தூண்டியது. ரஷியாவிடம் பிரிட்டனுக்கு நம்பிக்கை இல்லை ஆகவே, ரஷியாவுடன் உறவு கொண்டாடத் தயங்குகிறது. பிரிட்டனுக்குப் பரம விரோதியான ஜப்பானுடன் பிரிட்டன் சென்ற 20 வருடங்களாக உறவுகொண்டாடவில்லையா? இப்பொழுது கூட ஜப்பான் என்ன சொல்லுகிறது? 50 கோடி ஆசிய மக்களை,

(19ம் பக்கம் பார்க்க)

தங்கமெடல் பரிசுபெற்ற

ஹார்டஸ் ஆர்ட் எம்பிராயடரி ஒர்க்ஸ்

இந்திய பெண்மணிகளின் கைத் தொழிலை ஆதரியுங்கள்!

நமது ஸ்தாபனத்தில் பட்டுத் துணிகளில் நேர்த்தியான வெள்ளிச் சரிகைகளில் பூ வேலைகள் செய்து கொடுக்கப்படும். மணப்பெண்களுக்குரிய சேலைகள் ரவிக்கைகள் அவ்வைபவங்களுக்குத் தேவையான மற்றும் புடவைகள் பாவாடைகள் கவுன்கள் முதலியவற்றிற்கும் பல விதமான அழகிய சித்திரப் பூவேலைகள் செய்து கொடுக்கப்படும். பட்டுத் துணிகளில் சரிகை வேலை போட்டுக் கொடுக்க வேண்டியவர்கள் எமது ஏஜண்டிடமாவது நேரிலாவது விஜயம் செய்து ஆர்டர் கொடுத்து பரீட்சிக்குமாறு கோருகிறோம்.

(வெள்ளிச் சரிகை உத்திரவாதம்)

1-157, பிராட்வே, சென்னை.

பிராஞ்சு:-கொழும்பு.

ஆனந்தம் மனோ உற்சாகம்

உடையவர்களாயிருக்கவேண்டுமாகில் நீங்கள் எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி உபயோகியுங்கள். லட்சக்கணக்கான மக்கள் அதன் அருமையை அறிந்து அதையே வாங்கி உபயோகிக்கிறார்கள்.

எல். ஜி.

பெருங்காயமானது

எல்லா பெருங்காயங்களிலும்தலை சிறந்தது

நீங்கள் பெருங்காயம் வாங்கும்போது எல். ஜி. மார்க் போட்டிருக்கிறதாவென்பதைக் கவனித்து வாங்குங்கள்.

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்

லால்ஜி கோது அன் கோ,

சௌகார்பேட்டை மதராஸ்.



சங்கநாதம்

நித்திய கண்டம்!

பித்தந் தெளிய மருந்து!

உழக்கில் கிழக்கு மேற்கு!

பாம்புபோல் நழுவுவதேன்?

குண்டு சட்டியில் குதிரையோட்டம்!

சைமன் இறக்கிய சரக்கு!

(பூம்-பூம்)

ஐரோப்பாவில் பலாத்கார யுத்தம் இப்பொழுது மும்முரமாக நடக்காது போயினும், யுத்தத்தைத் தீவிரமாக நடத்த ஹிட்லர் யோசனை போட்டுக்கொண்டிருக்கிறார்; அதற்கான ஏற்பாடுகளையும் ஜரூராகச் செய்து வருவதாகக் கேள்வி. பிரிட்டனும், அந்தத் தீவிர யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டு வருகிறது. இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சாத்வீக யுத்தமோ, வேகத்தில் குறையவில்லை. இமய முதல் குமரிவரையில், சாத்வீகப் போரில் ஈடுபட்டு, ஏராளமான சத்தியாக்கிரகிகள் சிறை சென்று வருகின்றனர். இப் போராட்டத்தில் சென்னையே முன் நிற்கிறது; ஆந்திர மாகாணத்திலும், தமிழ் நாட்டிலும் சென்ற வாரம் ஏராளமான சத்தியாகிரகிகள் சிறை சென்றிருக்கிறார்கள். தென்னாட்டிலுள்ள முக்கியமான நகரங்களிலெல்லாம், ஒரு நகரங்கூடப் பாக்கியில்லாமல், ஒவ்வொரு ஊரிலும் சாத்வீகப்போர் நடந்ததென்றே சொல்ல வேண்டும். இதற்குமுன் நடந்த சட்டமறுப்புப் போராட்டத்துக்கும், இந்தச் சாத்வீகப் போராட்டத்துக்குமுள்ள ஒரு பெரிய வித்தியாசம் யாதெனில், இப்போராட்டத்தில் ஏராளமான பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்; தென்னாட்டில் அநேக பெண்மணிகள் சத்தியாக்கிரகஞ் செய்து சிறை சென்றிருக்கிறார்கள்; இன்னம் அநேக பெண்மணிகள் சிறை செல்லக் காத்திருக்கின்றனர். தென்னாட்டிற்கே இது ஒரு அழியாத புகழைக் கொண்டு வருமென்பதில் சந்தேகமில்லை. சாத்வீகப் போராடடம் வரவர மும்முரமாக நடைபெறுமென்பதற்கு அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. ரிசர்வ் படைபோல், பல ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகள், இப்போராட்டத்தில் இறங்கத் தயாராக இருக்கின்றனர்.

* * *

வட நாட்டிலும், இப்போராட்டத்துக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. பாஞ்சாலத்தில் மட்டும் சுமார் 500 சத்தியாக்கிரகிகள் தயாராக இருக்கின்றனர். அவர்கள் காந்திஜியின் கட்டளைக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்தும் பல நூற்றுக்கணக்கான சத்தியாக்கிரகிகளின் பெயர் காந்திஜிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. காந்திஜியே அந்த ஜாப்தாவை நேரில் கவனித்து வருகிறார். எல்லை மாகாணத்தில் தொடர்ந்து சத்தியாக்கிரம் நடந்து வருகிறது. எல்லைக் காந்தியின் சகோதரரும், மாஜி முதன் மந்திரியுமான கான் சாஹேப் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர் பல ஊர்களுக்குச் சென்று சட்ட மறுப்புச் செய்து வருகிறார். பெரிய தலைவர்களைத் தொடாமல், சிறு தலைவர்களை அங்கு கைது செய்து வருகின்றனர். எல்லை மாகாணமெங்கும் சாத்வீகப் போரை தீவிரமாக நடத்தச் சுமார் 30 செஞ்சட்டைத் தொண்டர்களை எல்லைக் காந்தி தயாரித்து வருகிறார். ஆகவே, எல்லையிலும், பலுசிஸ்தானத்திலும் இப்போராட்டம் மும்முரமாகலாம்.

* * *

எல்லை மாகாணத்துக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் வங்காளத்துக்கும் அடித்திருக்கிறது! அங்கு டாக்டர். சுரேஷ் பானர்ஜி, திரேந்திரநாத் முகர்ஜி முதலியோர் பல தடவை சத்தியாக்கிரகஞ்செய்தும், அவர்கள் கைதியாகவில்லை. அதனால், அவர்கள் ஊர் ஊராகச் சென்று சத்தியாக்கிரகஞ் செய்து வருகிறார்கள்; வங்காளத்திலும் 360 க்கு மேலதிகமான சத்தியாக்கிரகிகள் காந்திஜின்கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

* * *

சமீபத்தில்தான் சிறை சென்று விடுதலையான முதல் சத்தியாக்கிரகி விநோபா பாவே, மீண்டும் சத்தியாக்கிரகஞ் செய்யப் புறப்பட்டிருக்கிறார். சிறையிலிருந்து அவர் விடுதலையடைந்ததும், காந்திஜியைக் காண சேவா கிராமஞ் சென்றார். காந்திஜியின் கட்டளைப்படி மீண்டும் சிவ கிராமத்திலேயே சத்தியாக்கிரகஞ் செய்தார்; அந்தச் சத்தியாக்கிரகக் கூட்டத்துக்கு காந்தி, அன்னை கஸ்தூரிபாய் காந்தி, மகாதேவ தேசாய், ஆச்சாரியா கிரிபாளினி முதலியோர் சென்றிருந்தனர். சேவா கிராமத்தில் அவர் கைது செய்யப்படவில்லை; ஆதலால், வார்தா சென்று சத்தியாக்கிரகஞ் செய்தார். ஐக்ய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் ஆக்டிங் தலைவர் ஆச்சாரியா நரேந்திர தேவ் கைதியானார்; அவர் வீட்டையும் போலீசார் சோதனை போட்டனர். சத்தியாக்கிரகிகளுக்குச் சிறைத் தண்டனை விதிப்பதோடு அதிகாரிகள் திருப்தியடையவில்லை; கொழுத்த தொகை அபராதம் விதிப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்! அந்த அபராதத் தொகையைக்கொண்டு, சத்தியாக்கிரகிகளின் சிறைச் செலவைச் சமாளித்துக் கொள்ளலாமென்ற பொதுவான எண்ணம் போலும்! அப்படியானால், அது நல்ல யோசனைதான்; பொருளாதாரத்திலும் அதிகாரிகளுக்குப் புத்தி வந்திருக்கிறது! இனிமேல் தாராளமாகப் பெட்டிச் சாவியைக் கையில் கொடுக்கலாம்! மாஜிஸ்டிரேட்கள் அபராதம் விதித்தால், அதை வசூலிப்பதில் போலீசார் ரொம்ப அக்கரை எடுத்துக்கொள்ளுகிறார்கள்! வீடு புகுந்து, நகைகளைப் பறிமுதல் செய்வதிலும், பணப் பெட்டிகளைத் தூக்கிச் செல்வதிலும் அதிகாரிகள் நல்ல தாராளமான மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுகிறார்கள்! யமுனலால் பஜாஜுக்கு விதித்த 500 ரூபாய் அபராதத் தொகைக்காக, அவர் கம்பெனியிலுள்ள பணப் பெட்டியை ஜப்திசெய்தனர். ஆனால் நல்ல வேளை, அந்தப் பணப் பெட்டியிலிருந்த பணத்தை யெல்லாம் தலைகீழாகக் கொட்டிக்கொள்ளவில்லை 500 ரூபாய் அபராத தொகையைச் செலுத்தினதும், பணப் பெட்டியைத் திரும்ப வாபஸ் செய்தனர்.

ஃ ஃ ஃ

பாஞ்சால காங்கிரஸ் கமிட்டித் தலைவரான இப்திகாருதீனுக்கு ஒரு வருடக் கடுங்காவலும், 6000 ரூபாய் அபராதமும் விதித்தது ஞாபகமிருக்கலாம். அந்த அபராத தொகைக்காக அவருடைய 2 மோட்டார்களை ஜப்தி செய்தனர். மோட்டார்களை எங்கே கொண்டுபோய் வைப்பது; அல்லது, அந்த இரு கார்களையும், யார் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருப்பது? ஏலம் போட்டால், 6000 ரூபாய் கிடைக்குமா? ஏலம் எடுக்கத்தான் யாரும் வருவார்களா? இந்தச் சந்தேகங்கள் சர்க்காருக்கு ஏற்பட்டதுபோலும்! அதற்குப் பதிலாக அபராதத் தொகை முழுவதையும் வசூலிக்க அதிகாரிகள் ஒரு குயுக்தி செய்தனர். மியான் இப்திகாருதீனுக்கு இம்பீரியல் பாங்கியில் பணமுண்டு; கணக்குண்டு; அந்த பணத்திலிருந்து 6000 ரூபாயும் வசூலித்துக்கொண்டனர். இது லாகூர் வக்கீல்களுக்குப் பிடிக்கவில்லை. அரசியல் கைதிகளுக்காக இனமாக வாதாடுவதற்கென்று, வக்கீல் சங்கத்தார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியார் வலியச் சென்று, ஜனாப் இப்திகாருதீன் சார்பாக எதிர் வழக்காடினர்; ஹைக்கோர்ட்டுக்கு மனுக் கொடுத்தனர். ஹைக்கோர்ட்டு நீதிபதி, உடனே அந்த வழக்குச் சம்பந்தமான தஸ்தாவேஜிகளை அனுப்பி வைக்கும்படியும் அபராதத் தொகையை வசூல் செய்யும் உத்திரவை நிறுத்திவைக்கும்படியும் உத்திரவு போட்டிருக்கிறார். ஹைக்கோர்ட்டு நீதிபதியின் தீர்ப்பு எப்படி இருக்குமோ சொல்லமுடியாது. ஆனால், நீதிபதி உத்திரவு அதிகாரிகளை பரம சங்கடத்துக்குள்ளாக்கி இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

* * *

சத்தியாக்கிரகப் போராட்டம் போகும் வேகத்தையும், அதிகாரிகள் அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் போக்கையும் கவனித்தால், இந்திய அரசியல் நெருக்கடியைப் போக்கி, ஒரு சமரசத்துக்கு வழி செய்யவேண்டுமென்ற எண்ணமே அதிகாரிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியும் இந்தப் போராட்டத்தை சமாளித்துவிடலாமென்று அவர்கள் நினைத்துக்கொண்டிருப்பதாக எண்ணவேண்டியிருக்கிறது. ஹிட்லர்முஸோலினிகூட இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுவிடலாமென்றுதான் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் வெற்றி பெறுவார்களென்று யாரும் சொல்லக் கூடாது; சொல்லவும் முடியாது. இந்தச் சாத்வீகப் போராட்டத்தில்காங்கிரஸே வெற்றி பெறுமென்று சொல்லுவதைக் கூட, ரொம்ப பக்குவமாகச் சொல்ல வேண்டும். உண்மையை, உள்ளவாறு, பகிரங்கமாகச் சொன்னாலும் கோபம்! அதிகாரிகளின் கண்ணோட்டம் பாயலாம். எந்த நேரத்தில், யாருக்கு எத்தகைய தலையில் இடி வந்து விழுமோ சொல்ல முடியாது! நித்திய கண்டம் பூர்ண ஆயுள் என்றபடி, நித்திய கண்டத்தை மனதில் அடக்கஞ்செய்து, நடப்பதுபோல நடக்கட்டுமென்று துணிந்து இருக்கவேண்டியதுதான்! ஐரோப்பிய யுத்தம் முடிகிறவரையில், இந்தக் கண்டம் நீங்காது; அதேபோல், ஐரோப்பிய யுத்தம் முடிகிற வரையில் இந்தியாவில் ஆரம்பித்திருக்கும் சாத்வீகப் போராட்டமும் நிற்காது என்றே துணிந்து சொல்லலாம்! சர்க்கார் தேவதைகளின் மனம் இரங்கினாலொழிய இந்திய அரசியல் நெருக்கடியும் தீராது; இந்த நெருக்கடிக்கு என்றுதான் விமோசனம் ஏற்படுமோ தெரியவில்லை. அது எப்பேர்ப்பட்ட விமோசனமாக இருக்குமென்று ஜோசியங் கூறுவதற்கு வழியில்லை. ஆகவே, பத்திரிகைகளுக்கு வரக்கூடிய இடிகளையும், இடையூறுகளையும் சமாளித்துக் கொண்டு போக வேண்டியதுதான்; வேறு வழியில்லை.

(அடுத்த பக்கம் பார்க்க)

சங்கநாதம்

முன் பக்கத் தொடர்ச்சி

இந்த நெருக்கடியைத் தீர்த்து வைக்க யோசனை சொல்லுகிறவர்களும், வெறும் யோசனையுடன் நின்று விடுகிறார்கள்; அந்த யோசனைகளாவது உருப்படியான யோசனைகளாக இருக்கின்றனவா? இல்லை; நெருக்கடி தீராததற்கு வழி என்ன உண்டோ அத்தகைய யோசனைகளையே சொல்லுகிறார்கள். சமீபத்தில் டாக்டர். என். வி. தவார் ஒரு யோசனை சொன்னார். ஒரு சர்வ கட்சி மகாநாடு கூட்டி, அந்த மகா நாட்டின் மூலம் இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைக்கிறார். ஹிந்து-முஸ்லிம் தகாரறு தீர்ந்துவிட்டால், இந்த அரசியல் நெருக்கடியும் தானாகவே தீர்ந்து விடுமென்பது அவர் எண்ணம். அதற்காக ஒரு சர்வ கட்சி மகாநாடு கூட்ட வேண்டுமென்றும், அந்த மகா நாட்டுக்கு, காந்திஜி, பண்டித ஜவார்லால், சர்தார் பட்டேல், டாக்டர். ராஜேந்திர பிரசாத், மௌலானா அபுல்கலாம் அஸாத், எம். எ. ஜின்னா, சௌத்ரி கலிக்குஸ்ஸமான், சர் அப்துல்லா ஹாரூன், நவாப் ஜாதா லியாகத் அலி கான், டாக்டர். அம்பேத்கார், ராஜ போஜ், மாஸ்டர். தாராசிங், சர். ஹென்றி கிட்னி, சர். தேஜ் பகதூர் சாப்ரு, சர். முகமது யாகூப் டாக்டர். பரஞ்சுபே, வி. டி சவர்க்கார், சியாமத் பிரசாத் முக்கர்ஜி, சர். டி. விஜயராகவாச்சாரியார், சர். மிர்ஸா இஸ்மாயில், சர். சி. பி ராமசாமி ஐயர், மாஜி காங்கிரஸ் பிரதம மந்திரிகள், வங்காளம், அஸாம், ஸிந்து, பஞ்சாலம் முதலிய மாகாணங்களின் பிரதம மந்திரிகள் முதலியோர், அம் மகாநாட்டுக்கு வரவேண்டுமென்பது டாக்டர். தவார் கோரிக்கை. அம் மகாநாட்டுக்கு வைசிராய் தலைமை வகிக்கலாம். இன்றேல், கவியரசர் தாகூரைத் தலைமை வகிக்கும்படி கேட்க வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். இத்தனை தலைவர்களை அழைக்க எண்ணிய தவார், சு. ம. நாயக்கரை ஏன் மறந்து போனார்? சு. ம. ஜஸ்டிஸ் கட்சியல்லவென்று அவர் நினைப்பா; அல்லது, சு. ம ஜஸ்டிஸ்காரருக்கும், இந்த நெருக்கடிக்கும் சம்பந்தமில்லையென்பது எண்ணமா? தவார், அவர்களை மறந்தாலும், ஜின்னா மறக்கவே மாட்டார்.

* * *

டாக்டர். தவார் யோசனை நல்ல யோசனைதான்; ஆனால், அது உருப்படக் கூடிய யோசனையா? அம் மகா நாட்டுக்கு அழைக்க விரும்பும் காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பான்மையோர் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யச் சர்க்கார் ஒப்புக்கொள்ளுவார்களா? அப்படியே ஒப்புக்கொண்டபோதிலும், அம் மகா நாட்டில் ஒரு முடிவுக்கு வருவார்களா? அவ்வித முடிவைப் பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்ளுவார்களா? இவ்வாறு பலவித சங்கடங்கள் இருக்கின்றன. இந்த சங்கடங்களையெல்லாம் தாண்டிச் செல்லுவது கஷ்டமே. என்றாலும், டாக்டர். தவார் இது சம்பந்தமாக வைசிராயையும், காந்திஜியையும, ஜின்னாவையும் கண்டு பேசப் போவதாகச் சொல்லுகிறார். அவர் தாராளமாகக் கண்டு பேசட்டும்; அவர்களைக் கண்டு பேசிய பின்தான் டார்டர் தவாருக்கு இந்த மகா நாட்டுப் பித்தம் தெளியும்! அதுவரையில் அவருக்கு அந்த மகாநாட்டுப் பித்தந் தெளிய என்ன மருந்து கொடுத்தாலும், அதை அவர் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்!

* * *

ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டியது அவசியந்தான்; ஆனால், இந்த வகுப்புச் சனியனில் காங்கிரஸை ஏன் இழுக்க வேண்டும்? காங்கிரஸ் ஒரு போராட்டத்தில் இறங்கி இருக்கிறது; அது சுதந்திரப் போராட்டம்; சுதந்திரம் வந்தால், ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தானாகவே தீர்ந்துவிடும். காங்கிரஸ் ஒரு வகுப்பு ஸ்தாபனமல்ல; ஆகவே, வகுப்புப் பிரச்னையில் அது தலையிட முடியாது. தலையிடாமல் ஒதுங்கி இருப்பதுதான் காங்கிரஸுக்குக் கௌரவம்; இன்றேல், அது வகுப்பு ஸ்தாபனங்களுக்குச் சமமான அந்தஸ்துடையதாகிவிடும். அதுகூடவே கூடாது. டாக்டர். தவார், விருப்பம்போல் ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்க்கச் சர்வ கட்சி மகா நாட்டை நடத்தட்டும். அதில் என்ன முடிவு செய்கிறார்களோ, அதைச் சர்க்காருக்கும், காங்கிரஸுக்கும் அறிவித்துக் கொள்ளட்டும். லீக், ஹிந்து மகா சபை, சீக்கியர், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியோர் மனமுவந்து ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு திட்டத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளுவாரேயாயின், காங்கிரஸ் அந்தத் திட்டத்தை ஒப்புக்கொள்ள ஒருபோதும் மறுக்காது. ஆகவே' அதை அனாவசியமான வகுப்புப் பிரச்னையில் இழுத்துவிடுவது எனக்கு அடியோடு பிடிக்கவில்லை. இவ்வித கட்சி மகாநாடுகளில், காங்கிரஸ் கலந்துகொள்ள ஒருப்படுமேயாயின், காங்கிரஸ் லட்சியமே போய்விடும்; காங்கிரஸ் லட்சியங்களும், அதன் போராட்டமும் அரோகரா கோவிந்தாதான்! இதைக் காங்கிரஸ் தலைவர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக

* * *

லீக், ஹிந்து மகா சபை போன்ற வகுப்புவாதக் கட்சிகளுக்குள்ளேயே பிணக்குகள் இருக்கின்றன. வகுப்புப் பிரச்னை சம்பந்தமாக எந்த விதமான முடிவுக்கு வரலாம் என்று அக்கட்சித் தலைவர்களுக்குள்ளேயே தெளிவான அபிப்ராயம் இல்லை உழக்குக்குள் கிழக்கும், மேற்கும் என்றபடி, அவர்களுக்குள்ளேயே அபிப்ராய பேதம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் குண்டு சட்டியில் குதிரையோட்டம் நடத்த சிலர் முயற்சிக்கின்றனர்! எந்த முயற்சி எடுத்துக்கொண்டாலுஞ் சரி, அவ்வித முயற்சிகளுக்குப் பெருந் தேவதைகளான, அதிகார வர்க்கத்தினர் ஆசீர் அவசியம்! தேவர்களிடம் மனமாற்றம் ஏற்பட்டாலொழிய எதுவும் நடத்தமுடியாது; நடத்தினாலும் அது உருப்படவும் உருப்படாது. லீக் தலைவர் ஜின்னா தெற்கே இழுக்கிறார்; ஹிந்து மகா சபைத் தலைவர் சவர்க்கார் வடக்கே ஓடுகிறார்! ஜின்னாவுடன்சேர்ந்த ஹக் கிழக்கே பாய்கிறார்! என்றாலும், ஹிந்து-முஸ்லிம் பிரச்னையில் எப்படியும் ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்று ஹக் ஜின்னாவை வற்புறுத்துகிறார்; ஜின்னா ஜம்பம் பேசுகிறார். "எனக்குத் தெரியாதது உண்டா? சமரசத்தையும், சமாதானத்தையும் விரும்புகிறவர்கள் என்னை மிஞ்சியவர்கள் யாருமே கிடையாது!" என்று சொல்லிக்கொண்டே பழைய குப்பைக் கூளங்களைக் கிளறுகிறார். லீகை மடக்கவும், லீகுக்கு விரோதமாகத் துப்பாக்கி முனையைப் பிடிக்கவுமே காங்கிரஸ்காரர் இந்த சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று ஹக்குக்கு ஜின்னா பாடஞ் சொல்லிக்கொடுக்கிறார்! வங்கப் பிரதம மந்திரி ஹக் அதை ஒப்புக்கொள்ளுகிறார். என்றாலும், ஒரு நல்ல முடிவை அவர் விரும்புகிறார். ஆனால், மன்னனின் சொல்லுக்கு மறு சொல் உண்டா?

* * *

ஜின்னா சாஹேப் ஒன்று சொல்லி விட்டால், அதற்கு அப்பீலே கிடையாது. அவர் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று கடைசிவரையில் சாதித்தே தீருவார். லீக் கமிட்டியில் அவரை எதிர்ப்பவரும் கிடையாது. எதிர்த்தால், லீகை விட்டு வெளியில் போகவேண்டியதுதான்! சர். சிக்கந்தரும், ஹக்கும், ஜின்னாவை எதிர்க்காமல், பாம்புபோல் நழுவிக்கொண்டு போவதின் ரகசியம் இதுதான்! அவர்களுக்கு ஜின்னா போக்குப் பிடிக்கவில்லை; அவர் ஒரு "குட்டி" ஹிட்லராக இருப்பதை அவர்கள் வெறுக்கின்றனர்! ஜின்னா சாஹேபின் பாகிஸ்தான் திட்டத்தைச் சர். சிக்கந்தர் போன்றவர் விரும்பவில்லை. ஹக் அதைத் தூரத் தள்ள நினைக்கிறார்! ஆனால், அதைப் பகிரங்கமாகச் சொல்லி எதிர்க்க நடுங்குகிறார்! ஜின்னாவுக்கு இதுதான் கொண்டாட்டம்; அவரை எதிர்க்க ஆளில்லை யென்பது அவருக்குத் தெரியும்; ஆகவே, லீகை அவர் இஷ்டம்போல் ஆட்டிவைக்கிறார். அவர் லீகை கைப் பாவையாக ஆட்டிக்கொண்டிருக்கும் வரையில், ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்கோ, அல்லது, அந்தப் பிரச்னை தீருவதற்கோ வழியே இல்லை. ஒன்றில், ஜின்னா, லீகை விட்டுப் போகவேண்டும்; அல்லது, லீக் ஜின்னாவை விட்டு வேறு கை மாறவேண்டும்; அப்படியானால்தான் முக்கியமான ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தீர வழி ஏற்படும். அதுவரையில், ஒருவரையொருவர் பூச்சாண்டி காட்டிக் கொண்டு காலந் தள்ளவேண்டியதுதான்! இந்தப் பூச்சாண்டிக்கு முடிவே இருக்காது.

* * *

லீகர் பாகிஸ்தான் திட்டத்தைக் கைவிட்டாலொழிய ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தீரவழியில்லை. ஆனால், ஜின்னாவோ, பாகிஸ்தானத்துக்குப் புதுப் புது வகையான மெருகு கொடுத்துக்கொண்டே இருக்கிறார்! அமெரிக்கா "மன்ரோ" கொள்கையை இப்பொழுது கடன் வாங்கி இருக்கிறார்! இந்தியாவைக் கண்ட துண்டமாக்கி, இந்தியாவில் ஒரு "அல்ஸ்டரைச்" சிருஷ்டிக்கப் பிரிட்டனிலிருந்து பிரித்தாளும் தந்திரத்தைத் திருடியிருக்கிறார். ஆனால், அந்த "அல்ஸ்டர்" ஏற்படுவதால் யாருக்கு லாபமென்

(10-ம் பக்கம் பார்க்க)

வெல்லிங்டனில்

25-ந் தேதி சனிக்கிழமை முதல் | ராஜகுமாரி, செல்லம் | தினசரி 3 காக்ஷிகள்

நடித்த

சூரிய புத்ரி

(தமிழ்)

மத்தியதரக் கடல் போர்!

ஜெர்மனிக்கு நஷ்டம்

அபிசீனியா யுத்த ஆரம்பம்

பிரிட்டனுக்கு உதவிச் செய்வதில் ரொம்பத் தீவிரமாக இருக்கும் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்.

இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்குப் போதிய உதவிச் செய்யவேண்டுமென்ற ஆசை அமெரிக்காவில் அதிகரித்து வருகிறது. யுத்ததளவாடங்களைப் பிரிட்டனுக்கு இரவல் கொடுக்க வேண்டுமென்ற, அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் கொண்டுவந்த மசோதா மீது அமெரிக்கக் காங்கிரஸில் மும்முரமாக விவாதம் நடந்து வருகிறது. இந்த மசோதா மூலம் ரூஸ்வெல்ட்டுக்குப் பூர்ண அதிகாரம் கொடுக்கக்கூடாதென சிலர் ஆட்சேபிக்கின்றனர். ஆனல், பெரும்பான்மையோர் ரூஸ்வெல்ட்டை ஆதரிக்கின்றனர். ரூஸ்வெல்ட் மசோதா சில திருத்தங்களுடன் நிறைவேறிவிடுமென்பதில் சந்தேகமில்லை. இந்த மசோதா நிறைவேறி விட்டால், பிரிட்டனுக்கு அமெரிக்காவிலிருந்து ஏராளமாக உதவிகிடைக்கும்; பிரிட்டனுக்கு அமெரிக்காவின் பூர்ண ஆதரவு இருக்கும். பிரிட்டனுக்கு அமெரிக்காவிலிருந்து அதிக உதவி வருமுன் பிரிட்டனைத் தாக்கவேண்டுமென்பதுதான் ஹிட்லரின் ஒரே நோக்கம். அதற்காகவே மும்முரமான ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க ஹிட்லர் ஏற்பாடு செய்து வருகிருர். இதாலிக்கு ஏராளமான நாஜி ராணுவங்களை அனுப்பியிருக்கிருர். இதாலிக்குச் சொந்தமான ஸிஸிலி தீவு ஜெர்மானியர் கையிலிருக்கிறது. இந்தத் தீவு மத்தியதரக்கடலின் மத்தியிலிருக்கிறது ஆகவே, கடற்படை, விமானப்படை தளங்களுக்கு வசதியான இடம் இங்கு ஜெர்மானியர் ஏராளமான விமானங்களைக்கொண்டு வந்து மத்தியதரக் கடலிலுள்ள, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர். "ஸௌதாம்டன்" என்னும் பிரிட்டிஷ் குரூய்ஸரை ஜெர்மன் விமானங்கள் தாக்கின; கப்பல் தீ பிடித்து எரிந்தது; தீயை அணைத்துக் கப்பலைக் கரை சேர்க்க முடியாது எனக்கண்டதும், அந்தக் கப்பலைக் கடலில் மூழ்கடித்தனர். இதன் நிறை 5,000 டன். 6 அங்குல பீரங்கிகள் 12 இந்தக் கப்பலில் உண்டு. 3 விமானங்களும், 6 டார்பிடோ பீரங்கிகளும் உண்டு. இதிலுள்ள மாலுமிகள், துருப்புகள் தொகை 700. துருப்புகளுக்கு அதிகச் சேதமில்லை' 3 பேர்களே மரணமடைந்தனர்.

விமானங்கள் நாசம்

பிரிட்டிஷ் கடற்படைகளை எதிர்த்துவரும் ஜெர்மன் விமானங்களைப், பிரிட்டிஷ் விமானங்கள் தீவிரமாகத் தாக்கிவருகின்றன சில தினங்களில் சுமார் 40 ஜெர்மன் விமானங்கள் அழிந்தன. இப்பொழுதும் ஜெர்மானியர் பிரிட்டன்மீது வழக்கம்போல் விமானப் படையெடுப்பை நடத்திக்கொண்டுதான் வருகின்றனர். இப்பொழுது

இதாலி ராணுவங்களுக்கு ஒரு ஜெனரலாக நியமனம் பெற்றிருக்கும் இதாலி இளவரசர் அம்பர்ட்டோ.

ஸிஸிலி தீவில் இருந்து கொண்டு, மத்தியதரக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைகளை எதிர்த்து வருகின்றனர். பிரிட்டிஷ் கடற்படைத் தளமான மால்டாவையும் ஜெர்மன் விமானங்கள் அடிக்கடி தாக்கி வருகின்றன.

பால்கன்

பால்கனில், ஜெர்மன் ராணுவங்கள் பிரவேசித்து விட்டன. சுமார் 18 டிவிஷன் ஜெர்மன் ராணுவங்கள் வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான ராணுவங்கள் ருமேனியாவிலும், ஹங்கேரியிலுமே இருக்கின்றன. பல்கேரியா வழியாக ஜெர்மன் ராணுவங்கள் செல்ல முயற்சிக்கின்றன. ஆனல், பல்கேரியா மன்னர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. டானியூப் நதி பிரதேசத்திலும், ரஷிய எல்லையிலும், ஏராளமான ராணுவங்களை வைத்திருக்கிருர்கள். இந்த ராணுவங்களெல்லாம் பிரான்ஸ் வழியாகப் பால்கன் நாடுகளுக்குச் சென்றதாகத் தெரிகிறது. ருமேனியாமீது ஹிட்லர் திடீரெனக் கை வைக்கலாம்; ருமேனியா நாஜியர் ஆட்சிக்குள் வந்து விடுமேயாயின், பால்கன் நாடுகள் யாவற்றுக்கும் ஆபத்துத்தான்! ருமேனியா கடற்கரையோரங்களில், கடற்கண்ணிகளைப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, கருங் கடலிலிருந்து, எந்தக் கப்பல்களும், ருமேனியா கடற்கரைக்கு வர முடியாது ஹாலந்தில் மட்டும் சுமார் 10 லக்ஷம் ஜெர்மன் துருப்புகளிருக்கின்றனவாம். நார்வேயிலும் ஏராளமான துருப்புகள் இருக்கின்றன. பிரிட்டன்மீது படையெடுப்பதற்கு ஹிட்லர் இந்த ஏற்பாடுகள் செய்து வருவதாகக் கேள்வி.

லிபியா போர்

லிபியாவில் பிரிட்டிஷ் படைகள் முன்னேறிச் செல்லுகின்றன. டோப்ருக்கைத் தாக்க அங்கு தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். அல்பேனியாவில், கிரீஸுக்கு வெற்றிகள் அதிகமில்லை. ஆனல், இதாலி பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறது அல்பேனியாவிலுள்ள முக்கியமான நகரங்களெல்லாம் கிரீஸ் ராணுவங்களிடமே இருக்கின்றன. இதாலியில் பல ராணுவத் தளகர்த்தர்கள் முஸோலினியின் கட்டளைக்குக் கீழ்படிய மறுத்து ராஜிநாமா செய்திருப்பதால், இதாலிய இளவரசர் அம்பர்ட்டோ இதாலியின் ராணுவத்தில் ஜெனரல் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிருர். இந்த நியமனத்துக்காக இதாலி மன்னர் முஸோலினிக்கு நன்றி தெரிவித்துத் தந்தியடித்திருக்கிருர்.

விச்சி சர்க்காரில் ஒரு மந்திரி பதவிக்கு ஜெகஜால வித்தை செய்யும் லவால். இவரை ஹிட்லர் விசேஷமாக ஆதரிக்கிறர்.

துருக்கி

துருக்கி ராணுவ காரியாலய உத்தியோகஸ்தர்களை பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களான, அட்மிரல் ஹெவார்ட் கெல்லி, ஜெனரல் மார்ஷல் கார்ன்வால், விமான உப தளபதி எமஹர்ஸ்ட் முதலியோர் சந்தித்துப் பேசி வருகின்றனர். துருக்கித் தலைவர் இனேனும் இவர்களை வரவேற்றுப் பேசினர். பிரிட்டிஷ், துருக்கி ராணுவ அதிகாரிகள் மீண்டும் சந்தித்துப் பேசுவார்களென்று தெரிகிறது.

இதாலியை எதிர்த்து மீண்டும் போர் ஆரம்பித்திருக்கும் அபிசீனிய மன்னர் ஹெய்லி ஸிலாஸி.

அபிசீனியா யுத்தம்

அபிசீனிய யுத்தத்தை நடத்த அபிசீனிய சக்கிரவர்த்தி ஹெய்லி ஸிலாஸி, அபிசீனியாவுக்குப் போயிருக்கிருர். அடிஸ் அபாபாவில் இதாலியர் நாட்டிய ஒநாய்ச் சிலையைத் தகர்த்து எறிந்துவிட்டு, அந்த இடத்தில் யூதேயா தேசத்துச் சிலையான சிங்கச் சிலையை நாட்டப் போவதாக அவர் கூறினர். மன்னரைக் கண்டதும், அபிசீனிய மக்கள் குதூகலத்துடன் வரவேற்று முரசு கொட்டினர். அபிசீனியா விடுதலை நாள் சமீபித்துவிட்டதென்று, அவர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். நீல நதிக் கரையிலுள்ள ஒரு மாளிகையில் ஹெய்லிஸிலாஸி சிம்மாசனம் ஏறிவிட்டார். இனி அடீஸ் அபாபாவுக்குப் போவதுதான் பாக்கி. மன்னர் அங்கு செல்லவும் உறுதிகொண்டிருக்கிருர். சிற்சில இடங்களில் இதாலிய ராணுவங்கள் தோல்வியடைந்து ஓடுகின்றன. அபிசீனியாவுக்குப் பிரிட்டிஷ் ராணுவங்களின் உதவியும், விமானங்களின் உதவியும் ஏராளமாகக் கிடைத்திருக்கிறது இதாலி ராணுவங்களில் ஜெனரல்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அல்பேனியா போர் முனையில், இதாலிய சேனதிபதியாக இருந்த ஸோட்டு ராஜிநாமா செய்துவிட்டார். அந்த இடத்திக்கு, ஜெனரல் காபொல்லேரோ வந்திருக்கிருர். அப்படியானல் இது பஞ்சத்தால் ஏற்பட்ட நியமனமா அல்லது, யுத்தத்தைத் தீவிரமகா நடத்தும் நோக்கத்துடன் ஏற்பட்ட நியமனமா என்பது தெரியவில்லை.

(10-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மணி

சென்னை—விக்கிரம௵ தைமீ 6உ (19—1—1941)

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"!

ஜெ. எ. ஸ்பென்டர் என்பவர், ஒரு பிரபல பத்திரிகை எழுத்தாளர் சுமார் 50 வருடங்களாக அவருக்கு அதில் அனுபவமுண்டு. நிதானமாக எழுதுவார்; துவேஷமாக எழுதுவது வெகு அபூர்வம். அப்பேர்ப்பட்டவர், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகைக்கு இந்திய அரசியல் நெருக்கடியைப் பற்றி நீண்டதோர் கடிதம் எழுதியிருக்கிறார். அதில், இந்தியாமீதும், காங்கிரஸ்மீதும், கடைசியாகக் காந்திஜிமீதும் எவ்வளவு துவேஷம் கற்பிக்க முடியுமோ, அவ்வளவு துவேஷம் கற்பித்திருக்கிறார். நிதானமாக எழுதக்கூடிய ஒருவர், விஷமத்தனமாக எழுதப் புகுவாரேயாயின், அது அவருடைய எழுத்தல்ல; அவருடைய பேச்சுமல்ல; "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கிராமபோன் மாதிரி, அவருடைய பிரிட்டிஷ் எஜமானர்களுடைய கருத்தையே அவர் பேசியிருக்கிறார் இப்பொழுது ஸ்பென்டர்மூலம் பேசியிருப்பது இந்தியாவுக்கு மட்டுமல்ல,அது அமெரிக்காவுக்குமாகும். அமெரிக்காவில் இந்தியாவைப்பற்றிப் பிரசாரஞ் செய்யவும், இந்தியாமீது அங்கு கெட்ட எண்ணத்தை உற்பத்தி செய்யவுமே ஸ்பென்டர் மூலம் விஷமப் பிரசாரத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இந்திய உதவி!

இந்தியாவிலிருந்து ஏராளமாக உதவி வருகிறது; ஆகையால், காங்கிரஸ்காரர்களைக் கவனிக்கவேண்டியதில்லை. சத்தியாக்கிரகிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்; இன்றேல், திரும்பவும் வெளி வந்து, அவர்கள் யுத்த எதிர்ப்புப் பிரசாரஞ் செய்வார்கள் என்று ஸ்பென்டர் கூறுகிறார். இது வெறும் கண்மூடித்தனமேயாகும்; இந்தியாவிலிருந்து ஏராளமான உதவி, பிரிட்டனுக்குக் கிடைக்குமேயானால், காங்கிரஸ்காரருக்கு ஏன் பயப்படவேண்டும்? காங்கிரஸ்காரரின் யுத்த எதிர்ப்புப் பிரசாரம் ஏராளமான யுத்த உதவியை எப்படித் தடுத்துவிட முடியும்? இதிலிருந்து என்ன விளங்குகிறது? காங்கிரஸ் ஆரம்பித்திருக்கும் சாத்வீக எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு பிரிட்டன் பயப்படுகிறதென்பது தெளிவாகிறது. இன்றேல், சத்தியாக்கிரகிகளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று ஸ்பென்டர் போன்றவர் கூறவேண்டிய அவசியமே இல்லை.

எதேச்சாதிகாரியா?

காந்திஜி ஒரு எதேச்சாதிகாரி என்று கூறுகிறார். இது சுத்தப்பொய் காந்திஜி, காங்கிரசுக்கு ஒரு எதேச்சாதிகாரியல்ல; ஆனால், காங்கிரஸ் ஆரம்பித்திருக்கும் போராட்டத்தை நடத்தும் ஒரு ஜெனரல் ஸ்பென்டர் கண்களுக்குக் காந்திஜி ஒரு எதேச்சாதிகாரியாகத் தோன்றினால், அது காந்திஜி குற்றமல்ல; ஸ்பென்டரின் கண்கள் அவரை ஏமாற்றி இருக்க வேண்டும்! அப்படியானால், ஸ்பென்டர் அவருடைய கண்களுக்குச் சரியான கண்ணாடி போட்டுப் பார்க்கவேண்டும். காந்திஜி எதேச்சாதிகாரி யென்றால், லீகுடன் சமரசம் பேச அவர் மறுக்க வேண்டிய அவசியமே இல்லை. "அது என்னுடைய வேலையல்ல; காங்கிரஸ் கமிட்டியின் வேலை அது" என்று சொல்லியிருப்பதையாவது, ஸ்பென்டர் அறிவாரா?

முதல் நம்பர் விஷமம்!

காங்கிரசுடன் பிரிட்டன் சமரசஞ் செய்துகொள்ள வேண்டுமேயானால், நாஜி ஜெர்மானியருடன் செய்து வரும் யுத்தத்தை நிறுத்துவதைத் தவிர, பிரிட்டனுக்கு வேறு வழியில்லையென்று ஸ்பென்டர் விஷமத்தனமாகக் கூறுகிறார். இந்தியர்மீது அமெரிக்கருக்குத் துவேஷம் ஏற்படவே இவர் இந்த விஷமம் செய்கிறார்; அதில் சந்தேகமே இல்லை நாஜிஸத்தையும், பாஸிஸத்தையும் ஒழிக்கவேண்டுமென்றே காங்கிரஸ்காரர் கூறிவந்திருக்கிறார்கள்; இன்றைக்கும் அதையே வற்புறுத்தி வருகிறார்கள். இந்த யுத்தத்தை நிறுத்திவிடும்படி காங்கிரஸ்காரர் என்றும் சொன்னதே இல்லை. இந்த யுத்தத்தின் லட்சியம் என்னவென்றுதான் கேட்கிறார்கள் ஜனநாயகமே பிரிட்டனின் யுத்த லட்சியமென்றால், இந்தியாவுக்கும் ஜனநாயக சுதந்திரங் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் அந்த சுதந்திரம் கொடுப்பதாக இருந்தால், பொது எதிரியான நாஜியரை எதிர்க்க இந்தியரும் துணைச் செய்யத் தயார் என்று சொல்லுகிறார்கள். இதில் தவறு என்னவிருக்கிறது? இந்த உண்மையைத் திரித்துக் கூறுவது, ஸ்பென்டர் போன்ற ஒரு பெரிய எழுத்தாளருக்கு அழகாகுமா; அல்லது, அவரைத் தூண்டிவிடும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்குத்தான் அழகாகுமா?

மனமில்லை

ஸ்பென்டர் எழுத்தின் போக்கைக் கவனித்தால், பிரிட்டன் சமரசத்துக்குத் தயாராக இல்லை யென்று தெளிவாகத் தெரிகிறது. இந்தியர் கைக்கு, இந்திய அதிகாரத்தை மாற்றவும் அவர்கள் தயாராக இல்லை. அதற்குச் சம்மதிக்கவும் மாட்டார்கள். ஆகவே, இந்தியா விடுதலை, இந்தியர் கையிலேயே இருக்கிறது. அதைப் பிரிட்டிஷாரிடம் எதிர்பார்ப்பதும் முடியாது. விடுதலைக்குச் சரியான விலை கொடுத்து, அந்த விடுதலையை இந்தியரே அடையவேண்டும். விடுதலையின் விலை தியாகமே! தியாகத்தின் மூலந்தான் இந்தியர் விடுதலை அடையமுடியும். இந்திய சுதந்திரத்துக்கு வழி தியாகந்தான்; வேறு வழி இல்லை.

எது அவசியம்?

கடவுள் யார் சொத்துமல்ல; யாருக்கும் அவரிடம் தனி உரிமை கிடையாது. அவர் எல்லோருக்கும் சேர்ந்தம்; அவர் எல்லோருக்கும் பொதுவானவர். கடவுளைத் தரிசிக்கவும், அவருக்குப் பூஜை செய்யவும் வைதீகர் தனி உரிமை கொண்டாடுவதும் வெறும் அகம்பாவமேயாகும். கடவுள்முன் எல்லோரும் சமம்; எல்லா ஜீவராசிகளும் சமந்தான்; வைதீகர் எப்படி கடவுள்முன் ஒரு ஜீவராசியாக விளங்குகின்றனரோ, அதுபோலவே, பூச்சி புழுக்கள் எல்லாம் அவர் முன் ஒரு ஜீவராசியாகவே விளங்குகின்றன. இந்த நிலைமையில், மனிதராகிய தாழ்த்தப்பட்டவர்களை, வைதீக முண்டங்கள் எப்படி தீண்டாதார் என ஒதுக்கி வைக்க முடியும்?

உயர்வு, தாழ்வு

மனிதர் எல்லோரும் சமம்; ஆண், பெண், பாலர் எல்லோரும் மனித வர்க்கமே. மனிதரில் உயர்வு, தாழ்வு என்பதே இல்லை. பிறக்கும் போதுமில்லை; இறக்கும்போதுமில்லை. இதற்கு முன்னும் இருந்ததில்லை; இனிமேல் இருக்கப்போவதுமில்லை. இன்று உயர்வு தாழ்வு கற்பிக்கப்படுமேயானால், அது சுயநலம் படைத்த ஒரு கும்பலால் கற்பிக்கப்பட்ட உயர்வ தாழ்வேயாகும். அந்த உயர்வு தாழ்வு நீடித்திருக்கமுடியாது. அது அழிந்தே தீரும்; ஒன்றில் உயர்வு தாழ்வு அழியவேண்டும்; இன்றேல், அந்த உயர்வு தாழ்வைக் கற்பித்த குறும்புக்காரக் கும்பல் அழியவேண்டும்; இது நிச்சயம்.

ஆலயப் பிரவேசம்

ஆலயங்கள் எல்லோருக்கும் சொந்தம; எல்லோரும் அங்குசென்று ஆண்டவனைத் தரிசிக்கலாம். ஒரு ஜாதியாருக்கு ஒரு இடம், இதர ஜாதியாருக்கு மற்றோரிடம் என்று கூறுவது அறிவீனமேயாகும். அது முதல்தரமான அக்கிரமம்; தாழ்த்தப்பட்ட மக்களாயினுஞ்சரி, உயர்ந்தோர் என்று சொல்லிக்கொள்ளும் ஜாதிஹிந்துக்களாயினுஞ்சரி, வைதீகராயினுஞ் சரி, சனாதனப் பார்ப்பனராயினுஞ் சரி, எல்லோருக்கும் ஆலயங்களில் சம உரிமை இருக்க வேண்டும்; அந்த உரிமைகள் மறுக்கப்படுமேயானால், அந்த ஆலயங்களும் வேண்டாம்; அந்த ஆலயங்களில் இருப்பதாகச் சொல்லப்படும் கடவுள்களும் வேண்டாம். அந்த ஆலயங்களும், கடவுள்களும் அழிந்து போவது மேல்; மக்களில் பேதம் காணும் ஆலயங்கள் இருந்தென்ன, அழிந்தென்ன? அதேபோல், மக்களில் பேதங் கண்டு, உயர்ந்தோருக்குக் காட்சி அளிக்கும் கடவுள், தாழ்ந்தோருக்குக் காட்சி தர மறுப்பாரேயாயின், அந்தக் கடவுள் இருப்பதும் ஒன்றுதான். இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்; கடவுள் பேதமின்றி காட்சி தரும் ஆலயங்களில் எல்லோரும் சென்று தரிசிக்கலாம்.

முன்னேற்றம் அவசியம்

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேச உரிமைக்காகப் போராடுவதோடு நின்றுவிடக்கூடாது. ஆலயப் பிரவேசம் எப்பொழுதும் கிடைக்கும்; அதற்காகக் கவலைகொள்ள வேண்டியதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் வறுமை ஒழியவேண்டும்; வறுமை நீங்கினால், எல்லாம் தானகவே வந்துவிடும். கல்வியும், பொருளும் இருக்குமேயானால், உயர்வு, தாழ்வு என்ற பேதமே ஒழிந்துபோகும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசத்தில் கவனஞ் செலுத்தினால் போதாது பொருளாதாரம், கல்வி முதலிய அபிவிருத்திகளில் கவனத்தைச் செலுத்தவேண்டும். அதுவே முக்கியம்.

போதும்!

ஐரோப்பாவில் யுத்த நெருக்கடி அதிகரிக்க, அதிகரிக்க ஜப்பானின் போக்கும் நிமிஷத்துக்கு ஒரு விதமாக மாறிக்கொண்டு வருகிறது. எந்த ஆசிய நாடுமீது பாயலாம்; எந்த நாட்டை விழுங்கி ஏப்பமிடலாமென்பதே ஜப்பானின் எண்ணமாக இருந்துகொண்டிருக்கிறது! அதற்காக அது ஆசிய நாடுகளுக்குத் தர்ம உபதேசஞ் செய்கிறது. ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளுக்கு அடிமைப்பட்டிருக்கும் 50 கோடி ஆசிய மக்களைக் காப்பாற்றவேண்டியது ஜப்பான் கடமை யெனவும், அதற்காக ஆசிய மக்கள் எல்லோரும் ஜப்பானுடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் ஜப்பானில் புதிதாக ஏற்பட்டிருக்கும் ஜப்பான் லீகர் கூறுகிறார்கள். இந்த 50 கோடி மக்களில், இந்தியாவிலுள்ள 40 கோடி மக்களும் சேர்ந்திருப்பதைக் கவனிக்கவேண்டும்; இது ஜப்பான்மீது சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது.

வெளியேறட்டும்!

ஆசிய நாடுகளின் விடுதலையைப் பற்றிப் பேசும் ஜப்பான், சீனாவில் என்ன செய்கிறது? கோரியா, மஞ்சுகோ முதலிய நாடுகள் என்ன நிலைமையிலிருக்கின்றன? கடைசியாகச் சீனாவை ஏன் ஜப்பான் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது? பிறருக்கு உபதேசஞ் செய்யும் ஜப்பான், முதலில் சீனாவிலிருந்து வெளியேறட்டும்; அப்புறம் ஆசிய தேசங்களில் விடுதலையைப் பற்றி யோசிக்கலாம்! சீனாவிலிருந்து வெளியேறுதவரையில், ஜப்பானிடம் யாருக்கும் நம்பிக்கை ஏற்படாது. ஏதோ நயவஞ்சக எண்ணத்துடன் ஜப்பான் இந்த விடுதலைப் பேச்சைக் கிளப்பிவிடுகிறதென்ற சந்தேகமே ஊர்ஜிதமாகும். ஜப்பான் நயவஞ்சகப் பேச்சை நம்பினால், ஆபத்து நிச்சயம்; ஆசிய நாடுகள் அதோகதியாவது திண்ணம். போதும் ஜப்பானின் உபதேசம்!

மணியோசை

சர். ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார்,
கொச்சி

சு ம. திவானே!

நீங்கள் பச்சைத் தமிழர்; என்றலும், தமிழருக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை விதிவசத்தால் கொச்சிக்குத் திவானுனீர்கள்! ஆனல், சு. ம. தோழர் உங்களை மறந்துவிடவில்லை; உங்களைச் சு. ம. அறிவுப் பெட்டகமாகப் பூஜிக்கின்றனர்! நீங்கள் அறிவுப் பெட்டகமோ, அல்லது அறியாப் பெட்டகமோ அதைப் பற்றி நான் தர்க்கிக்க வரவில்லை. சென்னையில், பொங்கல் புது நாள் அன்று நீங்கள் பேசிய வெண்டைக்காய்ப் பேச்சைப்பற்றித்தான் உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். திராவிட நாட்டுப் பிரிவினை அவசியமாயென்று உங்களிடம் கேள்வி கேட்ட போது, அதற்குத் திட்டமான பதில் சொல்லாமல் வழ வழாக், கொழ கொழாவென்று பதில் கொடுத்திருக்கிறீர்கள்! உங்கள் பதில் கோழட்டி சாட்சியம் போலிருக்கிறது! "திராவிட நாட்டைத் தனி நாடாகப் பெற்றே தீரவேண்டும என்பதைப்பற்றி உறுதி கட்டிக் கூறுவதற்குக் காலம் வரவில்லை. 150 ஆண்டுகளாக இருந்து வரும் பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவைத் தனி நாடு என்று கருதித், தேசீய ஒற்றுமை என்ற உணர்ச்சி பெறச் செய்தது; அந்த ஒற்றுமை நிலைக்கச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும், ஆனல், தமிழ் நாட்டிலே, தமிழருக்குத் தமது உரிமை கிட்ட வில்லையென்று கவனித்த பிறகே இதைச் செய்ய வேண்டும்" என்று உபதேசஞ் செய்தீர்கள். அதாவது, திராவிட நாட்டுப் பிரிவினையை நீங்கள் முழுமனதுடன் ஆதரிக்கவில்லை; அங்குமிங்குமாக நுனிப் புல் மேய்ந்திருக்கிறீர்கள்! இந்தியா ஒரு தேசம் என்ற தேசீய உணர்ச்சியை வளர்க்க முயற்சித்தால் பிரிவினைக்கு இடமெங்கே இருக்கிறது? சுதந்திர இந்தியாவில் தமிழருக்கு உரிமை கிட்டாவிட்டால் அது எப்படி உண்மையான சுதந்திரமாகும்? சுதந்திர இந்தியாவில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு; இன்றேல், அது சரியான சுதந்திரமாகாது. இந்த நிலைமையில், நீங்கள் கூறும் பிரிவினைக்கு இடமே இல்லை. இதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? அப்படியானல், தமிழருக்குச் செய்யும் உபதேசத்தைத், தமிழ் நாட்டைக் கலக்கிக் குட்டிச்சுவராக்கும் கன்னடம் நாயக்கருக்கு உபதேசியுங்கள்; அதனுல் பலனுண்டு.

டிங்—டாங்

சுபாஷ் சந்திர போஸ்,
கல்கத்தா.

வங்கத் தலைவரே,

நீங்கள் நோய் வாய்ப்பட்டிருக்கிறீர்கள்; இந்த நிலைமையில் உங்கள் பிறந்த நாள் விழாவை நாடெங்கும் கொண்டாடும்படி, உங்கள் நண்பர் சிலர் வேண்டுகோள் அனுப்பினர். உங்களுக்கு அது விருப்பமில்லை; "பிறந்த நாள் கொண்டாட்டம் வேண்டாம்; அத்தகைய மகத்தான கௌரவத்துக்கு நான் உரியவனல்ல; நாட்டின் தற்கால நிலைமையும், இத்தகைய கொண்டாட்டத்துக்குத் தகுதியாக இல்லை" என்று கூறியிருக்கிறீர்கள். உங்களுடைய பெருந்தன்மையைப் போற்றுகிறேன். காங்கிரஸ் கொள்கையிலிருந்தோ அல்லது, காந்திஜியின் கொள்கையிலிருந்தோ நீங்கள் சிறிது மாறுபட்டிருந்த போதிலும், நீங்கள் ஒரு தியாகி என்பதை மறுக்க முடியாது. சர்வ தேசங்களிலும் உங்களுக்கு மதிப்புண்டு; இந்த நிலைமையில் உங்கள் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடக் கூடாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். கேவலம்! தமிழ்நாட்டில் கூடச் சரிவரத் தெரியாத, பேர் புள்ளி இல்லாத சில சில்லரைத் தலைவர்கள், அவர்கள் பிறந்தநாளைக் கொண்டாட, அவர்கள் பத்திரிகைகளிலேயே பிரமாதமாக விளம்பரஞ் செய்கிறர்கள்! ஒரு சிறு செய்தி வந்தாலும், அதைப் பார்டர் கட்டிப் பிரசுரிக்கின்றனர்! பிறந்த விழாச் செய்தி ஒன்றிரண்டு நாளோடு தீர்ந்து விடுகிறதா? இல்லை; சில வாரங்களுக்குத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கக்காணலாம்! அவ்வளவுக்கு அவர் பெரிய மனிதராம்! ஒரு பெரிய "பெரியார்', என்று காட்டிக்கொள்ள தன்னைத் தானே டமாரம் அடித்துக் கொள்ளுகிறர்! அப்பத்தில் மகிழ்ந்து, சுய விளம்பரத்தில் சுழன்று திரியும், சூன்யங்களுக்கு, உங்கள் அறிக்கை சரியான சவுக்கடியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. உங்கள் அறிக்கையைக் கண்டபின்பாவது, அந்தச் சுயநலக் குடுக்கைகளின் கண்கள் திறக்குமென்று நம்புகிறேன்!

டிங்—டாங்

வா. சு. பாவா சாஹேப் ராவுத்தர்,
நாகூர்.

தேச பக்தரே!

நாளொன்றுக்குச் சுமார் 1¼ ரூபாய் கூலி பெறும் ஒரு ஏழை முஸ்லிம் நீங்கள். என்றலும். லீக்மீது உங்களுக்குள்ள அபார பக்தியால், அந்தக் கூலியில் மீதப்படுத்திச் சுமார் 150 ரூபாய் க்ஷேமித்து வைத்திருந்தீர்கள். அந்தப் பணத்தை லீகுக்குக் கொடுக்கவேண்டுமென்பது உங்கள் அவா; ஆனல், உங்கள் ஆசையில் லீகரே மண்ணைப் போட்டனர்! இந்தியாவைத் துண்டு துண்டாக வெட்டிப் பங்கு போட வேண்டுமென்ற பாகிஸ்தான் திட்டம் ஏழை முஸ்லிமாகிய உங்களுக்குக் கூட சொல்லமுடியாத வெறுப்பை உண்டுபண்ணிவிட்டது. உடனே லீகிற்காகச் சேர்த்து வைத்திருந்த 150 ரூபாயையும். காந்திஜிக்கு அனுப்பிக் காங்கிரசை ஆதரிக்க முற்பட்டிருக்கிறீர்கள். உங்கள் தேசபக்தியை மனமாரப் பாராட்டுகிறேன் நான் மட்டுமல்ல; இந்நாட்டிலுள்ள 40 கோடி மக்களும் உங்களுடைய பக்தியைப் பாராட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை. நீங்கள் தேசத்துக்குச் செய்தது ஒரு சிறு தொண்டேயாயினும், அது ஒரு மகத்தான தொண்டு என்றே சொல்ல வேண்டும். உங்களுடைய தேச பக்தி லீகிடமும், லீகின் பாகிஸ்தான் திட்டத்திலும் குருட்டு நம்பிக்கை கொண்டிருக்கும் இதர முஸ்லிம் மக்களுக்கு நல்ல பாடமாக இருக்குமென்று நம்புகிறேன்

டிங்—டாங்

ஷேக் அப்துல் மஜீத்,
கராச்சி.

ஸிந்து மந்திரியே,

பாகிஸ்தானத்துக்கு நீங்கள் கூறும் வியாக்யானம் கொஞ்சமும் பொறுத்தமாயில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? பாகிஸ்தான் என்னவென்பது உங்களுக்கே சரிவரத் தெரியவில்லையென்றுதான் சொல்லவேண்டும்; அது சம்பந்தமாக உங்கள் மூளையே குழம்பி இருக்கும்போது, பிறருக்கு நீங்கள் எப்படி அதை விளக்கிக் கூற முடியும்? இந்தியாவிலுள்ள மாகாணங்களைப் பாஷா வாரியாகப் பிரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஒரு திட்டம் போட்டிருந்தது. அதைப்போலவே, சற்று விரிவான பிரிவினை பாகிஸ்தானம் என்று சென்னைக் கூட்டமொன்றில் நீங்கள் பேசினீர்கள். ஆனல், காங்கிரஸ் கோரும் பாஷாவாரி மாகாணங்கள் ஒரே இந்தியாவில்தான் இருக்கும்; உங்கள் பாகிஸ்தானமோ இரு இந்தியாவாகக் கூறுபோடுகிறது! இந்தியாவைக் கண்ட துண்டமாக்கும் இந்த யோசனையை எந்த இந்தியரும் சகிக்க மாட்டார்கள். பாகிஸ்தானத்திலிருக்கும் மைனரிட்டிகள், முஸ்லிம்களைத் தாராளமாக நம்பலாமென்று சொல்லுகிறர்கள். அப்படியானல், முஸ்லிம்கள் ஏன் ஹிந்துக்களை நம்பக் கூடாது? ஹிந்துக்களை நம்பாத முஸ்லிம்களை, இதர மைனரிட்டிகள் எப்படி நம்ப முடியும்? இந்தியாவைக் கூறு போட்டால்தான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையும், நல்லுணர்ச்சியும் ஏற்படுமா? அதே ஐக்யத்தையும், நல்லுணர்ச்சியையும் ஒரே இந்தியாவில் ஏன் ஏற்படுத்தக் கூடாது? நீங்கள் கூறுவது எல்லாம் விதண்டாவாதமாகவே இருக்கிறது! உங்கள் வாதம் ஊற்றுக்கு நில்லாது. ஆதலால், உங்கள் பாகிஸ்தானத்தைப்பற்றி வாதம் செய்யாமல், வாயை மூடிக்கொண்டிருங்கள்; வாய் திறந்தீர்களோ பாகிஸ்தான் குட்டு வெளிப்பட்டு விடும்!

டிங்—டாங்

குமாரி அமுருத கௌரி,
அலகாபாத்.

பெண்மணியே!

மைலாப்பூரில் கூடிய சென்னைப் பெண்கள் மகா நாட்டுக்கு நீங்கள் தலைமைவகித்துப் பேசிய சில வார்த்தைகள் பொன்னேபோல் போற்றப்படத் தக்கவை. சென்னைப் பெண்மணிகளுக்கு நீங்கள் நல்ல உபதேசஞ் செய்தீர்கள். "உங்கள் ஒத்துழைப்பையும், உங்கள் இருதயத்தையும் மகாத்மாவுக்கு அளியுங்கள். வாரத்துக்கு ஒரு முறையாவது பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று பலன் தரத்தக்க நிர்மாண வேலை செய்யுங்கள் வெறுப்பும், அகம்பாவமும், திமிருந்தான் தீண்டாமைப் பேய் ஒழிவதற்கு இடையூறக இருக்கின்றன" என்று சொன்னீர்கள். ஆம்; தீண்டாமை ஒழியாமல், இன்னமும் நாட்டில் இருந்து கொண்டிருப்பதற்குப் பெண்களே காரணம். ஆடவர்களைவிடப், பெண்களே தீண்டாமை, பாராமை, முதலிய ஊசிப்போன கொடிய வழக்கங்களில் அதிகமாக ஊறிப்போயிருக்கிறர்கள்! பெண்கள் மனம் வைத்தால், இந்தத் தீண்டாமைக் கொடுமையை நாட்டிலிருந்து வெகு சுலபத்தில் ஓட்டி விடலாம். நாட்டின் அடிமைத்தனத்தையும் சீக்கிரத்தில் ஒழித்துவிட முடியும். ஆனல், இந்தியப் பெண்மணிகள் இதில் போதிய கவனஞ் செலுத்தாதது வருந்தத் தக்கதே. பெண்கள் உரிமைகளுக்காக, அவர்கள் ஆடவருடன் போட்டி போடுகிறர்கள்; பெண்கள் உரிமை அவசியந்தான்; ஆனல், பெண்கள் உரிமையைத் தேடிக்கொள்ளுமுன், நாட்டு உரிமையைத் தேடிக்கொள்ளுவது அவசியமல்லவா? உங்கள் உபதேச மணி மொழிகளை, ஒவ்வொரு இந்தியப் பெண்மணிகளும் சிந்தித்துப் பார்ப்பார்களாக. அவர்கள் வெறும் சிந்தனையுடன் நின்றுவிடக் கூடாது. ஆடவருக்குத் துணையாக நின்று, தேச சேவையில் ஈடுபட முன்வருவார்களாக.

டிங்—டாங்

எம். ஏ. ஜின்னு,
பம்பாய்.

லீக் தலைவரே,

கல்யாணி என்ற இடத்தில் நீங்கள் பேசியது எனக்கு நூதனமாக இருந்தது! "அபிப்ராயங்களை மனம் விட்டுப் பேசி விவாதித்தால், இந்திய அரசியல் பிரச்னைகளுக்குச் சமாதான வழியில் பரிகாரம் ஏற்படும்; நாம் வெற்றி பெற முடியும்" என்று சொன்னீர்கள். மெய்தான்; ஆனல், மனம் விட்டுப் பேசவேண்டாமென உங்களை யார் தடுத்தது? காங்கிரஸ் தலைவர்கள் பலர் உங்களிடம் மனம் விட்டுப் பேசி, ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்க்கப் பலமுறை முயன்றனர். பாபு ராஜேந்திர பிரசாத் உங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்; பண்டித ஜவார்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் முதலியோர் உங்களைத் தேடி வந்து விவாதித்தார்கள். கடைசியில் காந்திஜி உங்கள் வீட்டு வாசலில் காத்திருந்து, உங்களைக் கலந்து ஆலோசித்தார். ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்தீர்களா? இல்லையே! ஒவ்வொரு சமயமும் ஏதேனும் ஒரு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே வந்தீர்கள். முதலில் 14 நிபந்தனைகள் போட்டீர்கள்; அப்புறம், லீகே முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி சபை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொன்னீர்கள்; இப்பொழுது பாகிஸ்தானைக் கிளப்பிக் கொண்டிருக்கிறீர்கள். அது போதாக் குறைக்குப் புதிதாக அதற்கு மெருகு கொடுக்க அமெரிக்க "மன்ரோ" திட்டத்தைச் சிருஷ்டித்து வருகிறீர்கள்! இவ்வாறு உங்கள் கோரிக்கைகள் வர வர, அனுமார் வால்போல் வளர்ந்துகொண்டு வருகிறதேயொழியக், குறையக் காணும்! இந்த நிலைமையில் உங்களுடன் எப்படி மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வரமுடியுமென்று உங்களையே கேட்கிறேன். நீங்களே அதற்குப் பதில் சொல்லுங்கள்.

டிங்—டாங்

சர், சிக்காந்தர் ஹயாத்கான்,
லாகூர்.

பாஞ்சால முதன் மந்திரியே,

எகிப்துப் போர் முனைகளுக்குப் போய்விட்டு, நீங்கள் சுகமே திரும்பி வந்ததற்குச் சந்தோஷிக்கிறேன்! போர் முனைக்குப போய்விட்டு வருவதென்றல் அது சாமான்ய காரியமல்ல; உயிர்தப்பி வருவதே அபூர்வம்! அது ஒருபுறமிருக்கட்டும்; எகிப்திலிருந்து திரும்பியபோது நீங்கள், எகிப்து பிரதம மந்திரியின் செய்தி ஒன்று கொண்டுவந்திருப்பது தான் எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது! "எங்கள் நாட்டிலிருந்த விரோதிகளை வெருட்டியடித்த இந்தியரின் ஆச்சரியமான செயல்களுக்கு நாங்கள் மிகவும் நன்றி செலுத்துகிறேம்" என்று எகிப்து முதன் மந்திரி உங்கள் மூலம் ஒரு செய்தி அனுப்பியிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். எகிப்து யுத்தத்தில் ஈடுபடவில்லை; இன்னமும் நடு நிலைமையையே வகித்து வருகிறது. இந்த நிலைமையில், எகிப்துமீது படையெடுத்து வந்த எதிரிகள் யார்? அதுதான் எனக்கு அடியோடு புரியவில்லை! நீங்கள் கொண்டுவந்த செய்தி, எகிப்து முதன் மந்திரி அனுப்பிய செய்திதானு, அல்லது வேறு யாரும் தயாரித்துக் கொடுத்த செய்தியா? நன்றக யோசித்துப் பாருங்கள். இந்த யுத்த காலத்தில் தப்புத் தண்டா வேண்டாம்!

டிங்—டாங்

பதை அவர் சிந்தித்துப் பார்த்தாரா? இந்தியாவிலும் ஒரு "அல்ஸ்டர்" ஏற்பட்டால், பிரிட்டிஷாருக்கே அதிர்ஷ்டம்! அதனுல்தான் அவர்கள் ஜின்னுவின் பாகிஸ்தான திட்டத்தைக் கண்டிக்காமலிருக்கிறார்கள். இந்தியா இரண்டு துண்டானுல் இந்தியாவுக்கு இரண்டு வைசிராய்கள் வரலாம்; ஒன்றையொன்று தூண்டிவிட்டு, காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியும். ஆனுல், முஸ்லிம் பாகிஸ்தானத்துக்கு, ஒரு ஜின்னுவோ, அல்லது, சிக்கந்தரோ, வைசிராயாக வரலாமென்ற பகற் கனவை அடியோடு மறக்க வேண்டியதுதான். ஜின்னு இந்தக் கனவு காண்பதற்கு முன்னமே பிரிட்டிஷார் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். இந்தியாவுக்கு வந்த, சர். ஜான் சைமன் இந்தக் கனவு கண்டுதான், பாகிஸ்தானத்துக்கு விதை போட்டார்! சைமன் கமிஷனில் அவர் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். "ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இரு தனி கலாசார சமுதாயங்கள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இந்தபாகிஸ்தானம் ஜின்னுவின் சரக்கல்ல; சைமன் கமிஷன் இந்தியாவில் இறக்கிய அபூர்வமான சரக்கு! இந்தச் சரக்கை வைத்துக்கொண்டே இன்று லீகர் கும்மாளம் போடுகிறார்கள்! லீகின் கும்மாளத்தைக் கண்டு ஹிந்து மகா சபையினர் கொதிக்கின்றனர்! இந்தக் கும்மாளமும், கொதிப்பும் அடங்கும் வரையில், வகுப்புப் பிரச்னை தீர மார்க்கமில்லை. அதுவரையில் துரதிஷ்டம் பிடித்த இந்தியா, அதன் தலைவிதியை அனுபவிக்க வேண்டியதுதான்!

ஃ ஃ ஃ

வகுப்புவாதிகள் எப்படிப் பிடிவாதமாக இருக்கிறார்களோ, அப்படியே பதவி ஆசைபிடித்த காங்கிரஸ்காரரும், பதவிகளில் பற்றுக் கொண்டிருக்கிறார்கள்; தேசியத்தில் அவர்கள் பற்றுக்கொண்டிருக்கவில்லை. காங்கிரஸ் ஒரு பெரிய போராட்டத்தில் இறங்கி இருக்கிறது. காங்கிரஸ் இருப்பது, அல்லது, இறப்பது என்ற உறுதியுடன் இந்தப் போராட்டத்தை நடத்தி வருகிறது. இந்தச் சமயத்தில் பதவி வேட்டைக்காரருக்குப் பதவிகளில் கண்ணேட்டமே இருக்கிறதேயொழிய, தேசியப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டுமே யென்ற எண்ணம் இல்லை. காங்கிரஸ் எதிரிகளைவிட, இந்தத் துரோகிகளே கொடியவர்கள். தேசியச் சுதந்திரப் போராட்டம் என்ன கதியானுலும் பாதகமில்லை; அவர்களுடைய பதவி போய்விடக் கூடாதே என்ற எண்ணத்தில், பதவிகளைக் குரங்கு பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்! சென்னைக் கார்பொரேஷனை எடுத்துக்கொள்ளுவோம்; காங்கிரஸ்காரர் கொண்டு வந்த ஒரு தீர்மானத்தால் அங்கு காங்கிரஸ் மானமே போய்விட்டது. அதற்குக் காரணம், கூட்டத்துக்கு வராத காங்கிரஸ் அங்கத்தினர்களே யாவர். சுய நலம் காரணமாக அந்தக் கூட்டத்துக்கு வராமல் சிலர் பதுங்கி விட்டனர். தீர்மானம் தோல்வியடைந்ததைக் கண்ட 19 காங்கிரஸ்காரர் வெளியேறும்

-: சங்கநாதம் :-

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடகம் நடத்தினர்; வெளியேறியவர் மீண்டும் அந்தச் சபைக்குப் போவதா? அணுவளவு சுய மதிப்பும், மான ரோஷமும் இருக்குமே யானுல், அவர்கள் மீண்டும் கார்ப்பரேஷன் மண்டபத்தில் கால் வைக்கவுங் துணிந்திருக்க மாட்டார்கள். அவர்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, உடனே மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும்.

ஃ ஃ ஃ

யுத்தப் பிரச்னைமீது மறு தேர்தலுக்கு நின்றால், யுத்தத்தை எதிர்த்துப் பேசவேண்டி வரும்; பாதுகாப்புச் சட்டம் அவர்களை நோக்கிச் சீறும். அதற்குப் பயந்து, ராஜினாமா செய்யத் துணியவில்லை; மீண்டும் கார்ப்பொரேஷன் பதவியில் போய் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். கார்ப்பொரேஷனிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு அங்கு வேலை என்ன? மறு தேர்தலுக்கு நிற்கத் தைரியமில்லாவிட்டால், உடனே சாத்வீகப் போராட்டத்தில் இறங்கி, சிறை செல்லுவதுதானே? அப்படியானுல், அவர்கள் சுயமரியாதையை யாவது காப்பாற்றிக்கொள்ளலாம்! சுயமரியாதையை இழந்து, கார்ப்பொரேஷனில் ஏன் பதுங்கி இருக்க வேண்டும்? அதனுல் என்ன மதிப்பு? உள்ள மதிப்பும் போய்விடுமென்பது தெரியவில்லையா? ஆசை வெட்கமறியாது என்று சொல்லுவார்கள்! பதவி ஆசை பிடித்த போலிக் காங்கிரஸ் பக்தர்களுக்கெல்லாம் இந்தப் பதவி ஆசையே தலைக்கேறியிருக்கிறது. ஆகவே, அவர்கள் கண் மூக்குத் தெரியாமல், திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இந்தப் போராட்டம், பதவிப் பித்துப் பிடித்தவர்களின் ஆசையில் மண்ணை வாரிப் போடும் என்பதை அவர்கள் நன்ருக உணர்ந்துகொள்ளுவார்களாக. கார்ப்பொரேஷன் காங்கிரஸ் அங்கத்தினர்களைப் போலவே, சில நகர சபைத் தலைவர்களும், ஜில்லா போர்டு தலைவர்களும் இருக்கின்றனர். அவர்களுடைய எதிர்கால அரசியல் வாழ்க்கையும் பாழ் என்பதை அவர்கள் இப்பொழுதே அறிந்துகொள்ளுவார்களாக.

ஃ ஃ ஃ

ஐக்ய மாகாண மாஜி மந்திரியும், டில்லி சட்டசபை அங்கத்தினருமான பண்டித பியாரிலால் சர்மா இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ருர்; ஆனுல், நோய் காரணமாகவிடுதலையடைந்தார். சிகிச்சை செய்து கொள்ள டில்லி சென்ருர். ஆனுல், டில்லியில் வயிற்றுக்கோளாறு அதிகரித்து, டில்லியிலேயே காலஞ் சென்ருர். அவர் பிரேத ஊர்வலம் டில்லியில் நடந்தது. உடனே அவருடைய சொந்த ஊரான மீரத்துக்கு அவர் பிரேதத்தைக் கொண்டு போனுர்கள். அங்கும் அவர் சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று, தகனஞ்செய்தனர். 68 வயதில் சிறை சென்ற, இந்தத் தேச பக்தரின் சிறை வாழ்க்கையே, அவர் உயிருக்கு உலை வைத்தது.

ஃ ஃ ஃ

வங்காளத்தில் ஹிந்துக்களுக்கு நடந்துவரும் அநீதங்கள், ஹிந்துக்களைத் தட்டி எழுப்பி விட்டது. வங்க சர்க்காரின் போக்கு மாருவிட்டால், அங்கு ஒரு போராட்டத்தை ஆரம்பித்து, ஹிந்துக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டி வருமென ஹிந்து மகா சபை காரியதரிசி, டாக்டர். சியாமப் பிரசாத் முகர்ஜி, வங்க சர்க்காரை எச்சரித்திருக்கிருர். லோகமான்ய பாலகங்காதர திலகர் இந்திய சுதந்திர இயக்கத்தின் பிதா. அவர்குமாரர், ஆர்.பி.திலகர் இன்று சாகும் வரையில் பட்டினி கிடக்கத் துணிந்திருக்கிருர். அவர் தந்தை விட்டுப்போன 'கேசரி,' 'மராட்டா' என்னும் பத்திரிகைகளின் டிரஸ்டிப் பொறுப்பை, டிரஸ்டிகள் நிர்வகிக்கக் கூடாதென்றும், அந்த நிர்வாகப் பொறுப்பைத்தேசியக் காங்கிரசிடம் ஒப்படைக்கவேண்டுமென்றும் டிரஸ்டிகளை அவர் கேட்டுக்கொண்டார். அவர்கள் அதற்கு இணங்காததால், சாகும் வரையில் பட்டினி கிடக்கத் துணிந்திருக்கிருர். பூனுவில், அவருடைய சொந்த வீட்டில்தான் இந்த பட்டினி விரதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. டிரஸ்டிகள் வழிக்கு வருவார்களா, அல்லது, அவர்கள் பிடிவாதத்தால், திலகர் குமாரனின் உயிரைப் பழிவாங்கப் போகிருர்களா?

★

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

விச்சி நிலைமை

விச்சி சர்க்காருக்கும், ஜெர்மனிக்கும் இன்னமும் சமரசம் ஏற்படவில்லை. மார்ஷல் பெடெய்ன் எழுதியகடிதத்திற்கு, ஹிட்லரிடமிருந்து இன்னமும் பதில் வரவில்லை. விச்சி சர்க்கார் மந்திரி சபையில்லவாலுக்கு இடங்கொடுக்க வேண்டுமென்று ஜெர்மன் அதிகாரிகள் இன்னமும் வற்புறுத்தி வருகிருர்கள். ஆகவே, பெடெய்ன் அவருடைய மந்திரி சபையை முற்றிலும்மாற்றி அமைக்கப் போவதாக ஒரு செய்திகிடைத்திருக்கிறது. அந்த மந்திரி சபையில் லவாலுக்கு இடங்கிடைக்குமாவென்பது சந்தேகந்தான். லண்டன் நகரிலும் சுற்றுப் புறங்களிலும் அக்னி குண்டுகளைஎறிந்து, மீண்டும் லண்டனைப் பாழாக்க ஜெர்மன் விமானங்கள் முயற்சித்தன ஆனுல், நாஜியரின் முயற்சி பலிக்கவில்லை. சிற்சில இடங்களில் அக்னிக் குண்டு விழுந்து சேதமாயின.

யுத்த ஜோஸியம்
(காந்தி ஜோஸியர் எழுதியது)

யுத்தத்தின் போக்கு, முடியுங்காலம், யாருக்கு வெற்றி, எப்போது உலக சமாதானம் முதலிய விவரங்களும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி, ஹேர் ஹிட்லர், சீனர் முஸோலினி, ஸ்ரீ. சர்ச்சில் இவர்களது ஜாதக பலன்களும், மற்றும் ஜெனரல் பிராங்கோ, ஸ்டாலின், சியாங்கேஷேக், ரூஸ்வெல்ட், அபிசீனிய சக்ரவர்த்தி முதலியோர்களின் பலன்களுடன் ஜாதகங்கள். 32 பக்கங்கள்

தமிழ், இங்கிலீஷ் இரு பாஷைகளிலும் புஸ்தகங்கள் தயார்.

விலை:—தமிழ் **0-6-0** இங்கிலீஷ் **0-8-0**

ஜனவரி 31உ க்குள் முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு இனும்.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

இனும் வைத்திய விதை
பூர்ண ஆரோக்கியம்,இன்ப வாழ்க்கை,நல்ல சந்ததிக்கும் வழி.
மதன மஞ்ஜரி பார்மஸி,
184 சைன பஜார், மதருஸ்.

உடனே தேவை

கீழ் கண்ட ஊர்களுக்கு- டிபாஸிட் கட்டக் கூடிய நாணயமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஊர்	டிபாஸிட் ரு.
திருப்பூர்	,, 40
தேவகோட்டை	,, 30
திருச்செங்கோடு	,, 30
ஸ்ரீவைகுண்டம்	,, 25
குளித்தலை	,, 25
அரக்கோணம்	,, 25
வாணியம்பாடி	,, 20

மானேஜர்:—
"தமிழ் மணி" மதராஸ்.

டம்-டம் ❁ குண்டு

ஒரு குண்டுக்கு 8 குட்டிக்கரணம்!

-: பத்தாம் பசலிகள்! :-

- சிதம்பர ரகசியமா? -

⁘ உனக்கும் பே, பே! ⁘

வீரர் யார், வீணர் யார்?

இரண்டகம் நினைக்கும் சண்டாளர்!

(எம்டன்)

நாக்கில் நரம்புண்டா என்று கேட்பதுண்டு. ஏன்? நாக்கில், நரம்பில்லாததால், அது எப்படி வேண்டுமானாலும் வளையும்; இஷ்டம்போல் எதை வேண்டுமானாலும் பேசும். இவ்வித பேச்சுக்குத்தான் நாக்கில் நரம்பில்லாத பேச்சு என்று சொல்லுவார்கள்; ஆனால், அந்தப் பேச்சுக்கு மதிப்புண்டா? கிடையாது. நாவை எவர் அடக்கிப் பேசுகின்றனரோ, அவர் பேச்சுக்குத்தான் மதிப்புண்டு. அதிகப் பிரசங்கித்தனமான பேச்சுக்கு மதிப்பே இருக்காது. அந்தப் பேச்சுக்கு செவி சாய்ப்பவரும் அபூர்வம். அவர்கள் பேச்சுக் காற்றோடு போக வேண்டியதுதான்! ஏனெனில், அவாகள் பேச்சில் உண்மை இருக்காது; சுயநலமே நிறைந்திருக்கும். சமயத்துக்குத தகுந்தாற்போல் என்ன வேண்டுமானாலும் பேசுவார்கள்; நாக்கு எங்கு வேண்டுமானாலும் புரளும் இவர்கள் நம் நாட்டில் கூட ஏராளமாக இருக்கிறார்கள் இவர்கள் தினசரி பேசுகிறார்கள்; பக்கம் பக்கமாக அறிக்கைகள் வெளியிடுகின்றனர். அண்டத்தைப் புரட்டி விட்டதாகக்கூடச் சொல்லுவார்கள்! யுத்தகளத்துக்குப் பறந்து சென்று, யுத்தத்தில் நேரில் போராடுபவர்களைப்போல் பேசுவார்கள். அவர்களாலேயே இன்று யுத்தம் நடைபெறுவதாகக் கூட ஜம்பமடிப்பார்கள்! யுத்தத்தை நடத்துபவர்களும், பிரிட்டனைத் தாங்கிக் கொண்டிருப்பவர்களும், அவர்களே என்ற அகம்பாவத்துடன் பேசுகிறவர்களுமுண்டு. பேச்சளவில் அவர்கள் வீரர்கள்தான்; ஆனால் யுத்தகளத்தை அவர்கள் எட்டிக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்! குண்டு சப்தம் கேட்டால், எட்டுக் குட்டிக்கரணம் எண்ணிப் போடக்கூடிய பேர்வழிகள்; விமான இரைச்சல் கேட்டால் எட்டுக்காதம் ஓடி ஒழியக்கூடிய வீராதி வீரர்கள், யுத்தத்தைப்பற்றிப் பேசுவதும், எழுதுவதும் வேடிக்கைதான்! யுத்தமுனைகளும், போர்க்களங்களும் தெற்கே இருக்கின்றனவா, அல்லது, வடக்கே இருக்கின்றனவா? என்பதைக்கூடச் சரிவரத் தெரிந்து கொள்ளாத பத்தாம் பசலிகள், குஞ்சுத் தவளை மாதிரி, வயிறு வெடிக்கப் பேசுவதைக் கேட்டு யார்தான் சிரிக்காமலிருக்க முடியும்? இவர்கள் பேச்சைத்தான் நாக்கில் நரம்பில்லாத பேச்சு என்று சொல்லுகிறேன்.

⁂ ⁂ ⁂

இது ஒரு வகையார்; இவர்கள் பேச்சும் ஒரு தனி ரகம்; வேறொரு ரகத்தினருமுண்டு; இவர்கள், தாங்களே சர்வமும் என்ற இறுமாப்புக் கொண்டவர்கள். இந்த ரகத்தைச் சேர்த்தவர்களே தற்கால ராஜ பக்தர்கள்; சர்க்காருக்குச் சதா தூபம் போட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் அசைந்தால்,இந்த அண்டமெல்லாம் அசையும்; பிரிட்டன் கூட அசைந்து கொடுக்குமென்ற மமதை கொண்டவர்கள். இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் ஜின்னா சாஹேப், ஹக், சர். சிக்காந்தர் ஹயத்கான், அம்பேத்கார் முதலியோர். இவர்கள் பேச்சு பிரமாதமாகத்தான் இருக்கும். ஆனால், இவர்களால் கடுகளவுகூட ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது சாதிக்கும் திறமையும் கிடையாது. வெறும் ஜம்பப் பேச்சுடன் இவர்கள் திருப்தியடைய வேண்டியதுதான். இவர்கள் பேச்சை, இவர்கள் தூபம் போடும் சர்க்கார்கூடக் காதில் போட்டுக்கொள்ளுவதில்லை; இந்த நிலைமையில், இவர்கள் பேச்சுக்குப் பொது ஜனங்களிடையே என்ன மதிப்பிருக்கப் போகிறது? ஆனால், விஷமத்திலும், வசை புராணம் பாடுவதிலும், உள்ளதைத் திரித்துக் கூறுவதிலும் இவர்கள் பேச்சு சப்பட்டையாக இருக்காது.

⁂ ⁂ ⁂

சர். சிக்கந்தர் ஹயத்கான் பாஞ்சால முதன்' மந்திரி; பரம ராஜ பக்தர்; அவருடைய ராஜபக்தியே இன்றும் அவரைப் பதவியில் வைத்துக் கொண்டிருக்கிறது. ஜின்னாவைப்போல், இவர் அவ்வளவு மோசமான ரகத்தைச் சேர்ந்தவர் அல்லவேயாயினும், காங்கிரசுக்கு விரோதமாக விஷமப் பிரசாரஞ் செய்வதில், இவர் ஜின்னா சாஹேபுக்கோ, அல்லது தெற்கேயுள்ள சு.ம. நாயக்கருக்கோ இளைத்தவரல்ல. அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்! இன்றேல், இந்த சிக்கந்தரைப் பிரிட்டிஷார் ஸூடானுக்கு அனுப்பி வைத்திருப்பார்களா? சிக்கந்தர் முதல், ஜின்னா வரையில் வெறும் பொம்மைகள் என்பது பிரிட்டிஷாருக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இந்த நெருக்கடியான நிலைமையில் இந்தக் கோபுரப் பொம்மைகளைக் காட்டி, அரசியலில் கூத்து நடத்தி வருகின்றனர்! இந்த அரசியல் கூத்தின் அந்தரங்கத்தைக்கூட இந்தப் பொம்மைகளால் அறிந்துகொள்ள முடியவில்லை. அறிந்திருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளுவதில்லை; காட்டிக்கொண்டால் மானம் போய்விடுமல்லவா? அதற்காகவே உள்ளதைத் திரித்துக் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

⁂ ⁂ ⁂

சர். ஹயத்கான் சூடானுக்குப் போய்விட்டு வந்ததும், ஒன்று சொன்னார்; அது ஒன்றே அவர் கோபுர பொம்மை யென்பதை வெட்டவெளிச்ச மாக்கிவிட்டது! "இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிக்கும், சங்கடத்துக்கும் காங்கிரஸ்காரரே பொறுப்பு; என்னுடைய கோரிக்கைகளுக்குக் காங்கிரஸ் காதுகொடுத்து, மனம் தெளிந்து நடந்துகொள்ள முன் வந்திருந்தால்,'இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்க முன் வரும்படி நான் பிரிட்டிஷாரைக் கேட்டுக்கொண்டிருப்பேன்" என்று சர். சிக்கந்தர் சொன்னார். இதைத்தான் நாக்கில் நரம்பில்லாத பேச்சு என்று சொல்லுகிறேன். சர். சிக்கந்தரின் கோரிக்கைதான் என்ன? அது அவருக்குத்தான் தெரியும்; உங்களுக்கும், எனக்கும் அது தெரியவே தெரியாது: அவ்வளவு சிதம்பர ரகசியமாக அவர் கோரிக்கைகளை வைத்திருக்கிறார் போலும்! அவர் கோரிக்கைகள் எப்படியோ இருக்கட்டும்; அவர் நிபந்தனைகளில் ஒன்று, காங்கிரஸ்காரர் யுத்தத்துக்கு உதவிச் செய்யவேண்டுமென்பது யுத்தத்துக்கு உதவிச் செய்திருந்தால் காங்கிரஸ் கோரிக்கைக்குச் சர்க்கார் இணங்கி வந்திருப்பார்களா? அப்பொழுதும் இந்தப் பழைய பல்லவியைத்தானே பாடியிருப்பார்கள்.

⁂ ⁂ ⁂

இன்றுதான் என்ன? காங்கிரஸ்காரர் யுத்த உதவிச் செய்யாவிட்டாலும், இந்தியாவிலிருந்து ஏகோபித்த ஆதரவு கிடைத்துக் கொண்டிருப்பதாக இந்திய சர்க்காரும், பிரிட்டிஷாரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; அப்படியே அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரசாரஞ் செய்து வருகிறார்கள்! இந்தியாவிலுள்ள வைசிராய் முதல், சகல மாகாண கவர்னர்களும், சிதறிக்கிடக்கும் சில்லரைத் தேவதைகளும், யுத்தப் பிரசாரக் கமிட்டியினரும் அப்படியே சொல்லி வருகிறார்கள். வேறு எந்த மாகாணத்தையும்விட, யுத்த நிதிக்கு சென்னையில் எத்தனையோ லக்ஷக் கணக்கான ரூபாய் திரட்டியிருப்பதாகச் சென்னை கவர்னர் மார்தட்டிக் காட்டுகிறார்! இந்த உதவி யெல்லாம் வலுக்கட்டாயமாக இல்லாமல் மனமார வரும் உதவியென்றுசொல்லிக்கொள்ளுகிறார்! இந்தியாவில் ஏகோபித்த ஆதரவு இருக்கும் போது சர்க்கார் ஏன் மனமார இந்தியர் கோரிக்கைக்கு இசைந்து வரக்கூடாது? காங்கிரசை ஏன் பொருட்படுத்த வேண்டும்? சர்க்கார் காங்கிரஸைக் கவனிப்பதா, இந்திய பொது மக்களைக் கவனிப்பதா? பொது மக்கள் மனமார உதவிச் செய்யும்போது, இந்தியர் கோரிக்கைக்கு இணங்கி வரவேண்டியது சர்க்கார் கடமையல்லவா? சர்க்கார் அவர்கள் கடமையைச் செய்தார்களா? இல்லையே! சர். சிக்காந்தர் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

⁂ ⁂ ⁂

காங்கிரஸ்காரரைத்தான் சர். சிக்காந்தர் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? காங்கிரஸ்காரர் அவர் கோரிக்கைக்கு இசைந்து வராவிடில் என்ன? இந்தியாவில் ஏகோபித்த ஆதரவுஇருக்கும் போது, இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைக்கும்படி அவர் ஏன் பிரிட்டிஷாரைக் கேட்கக் கூடாது? சர். சிக்காந்தர் ஹாயத்கான் பிரிட்டிஷாரிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுவதால், பிரிட்ஷார் அவர் கோரிக்கைக்கு இணங்கி வந்து விடுவார்களா? பிரிட்டிஷார், சிக்காந்தரின் ஏவலாட்களா? இல்லவே இல்லை; சர். சிக்காந்தர் அல்ல, ஜின்னா அல்ல; இவர்களைப்போல் ஆயிரம், ஆயிரம் சிக்காந்தர்களும், ஜின்னாக்களும் சிபார்சு செய்தாலுஞ்சரி, அல்லது கெஞ்சினாலுஞ்சரி,பிரிட்டிஷார் இம்மிகூட அசையமாட்டார்களென்பது திண்ணம். உனக்கும் பே பே; உன் அப்பனுக்கும் பேபே என்றுதான் பிரிட்டிஷார் பதில் சொல்லுவார்கள்! அந்த உண்மையை அறியாமல் சர். சிக்காநதர் என்னமோ ஜம்பம் பேசுகிறார்! அவரைப் பிரிட்டிஷார் எவ்வளவு மதிப்பில் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர் அறிய வேண்டுமா? பிரிட்டிஷாரிடம் இந்திய அரசியல் நெருக்கடியைப்பற்றிப் பேசிப் பார்க்கட்டும்; என்ன பதில் கிடைக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுவார்.

⁂ ⁂ ⁂

சர். சிக்காந்தர் மற்றொரு "அவுட்" விடுகிறார்! "காங்கிரஸ்காரர் டில்லித் தீர்மானத்துக்குப் பின், சர்க்கார் அபிப்ராயத்தைத் தெளிவுபடுத்தும்படியும், முக்கியமான நிர்வாக விஷயங்களை ஜனப் பிரதிநிதிகளிடம் ஒப்புவிக்கும்படியும்கேட்டு, அதற்குச் சர்க்கார் சரியான பதிலளிக்காது போனால், இப்போதைய கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கலாம்; அப்படியானால், இந்தக் கிளர்ச்சியை நியாயமானதென ஒப்புக்கொள்ள முடியும்" என்று கூறுகிறார். இது சுத்த "ஹம்பக்" பேச்சு! உண்மையைத் திரித்துக் கூறும் தெந்தினாப் பேச்சு! காங்கிரஸ் ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; யுத்தம் ஆரம்பித்தபின், சுமார் ஒரு வருடம் வரையில் காத்திருந்தது. வைசிராயை மட்டுமல்ல! பிரிட்டிஷ் சர்க்காரை எத்தனையோ முறை

(அடுத்த பக்கம் பார்க்க)

டம்-டம் குண்டு

(முன் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கியது. பிரிட்டிஷாரின் யுத்த கொள்கை என்ன; அந்தக் கொள்கை இந்தியா விஷயத்திலும் அனுஷ்டிக்கப்படுமா என்று கேட்டது. வைசிராயைக் காந்திஜி எத்தனையோ முறை கண்டு பேசினார். எவ்வளவோ விட்டுக் கொடுத்தார்; வைசிராயோ, பிரிட்டிஷாரோ காங்கிரஸ் கோரிக்கைக்கு இணங்கி வந்தார்களா? இல்லை. அவர்கள் கொள்கைதான் என்ன வென்பதைத் தெளிவு படுத்தினார்களா? கிடையாது. காந்திஜி ஆத்திரக்காரர் அல்ல; அவசரப் பட்டு எதையும் செய்யக்கூடியவருமல்ல. ஆகவே, சர். சிக்காந்தர் இன்று காங்கிரஸ்காரர்மீது பழி போடுவது சுத்த அறிவீனவே'யாகும். அது வீண் அகம்பாவமும், அக்கிரமுமென்றே சொல்ல வேண்டும்.

ஃ ஃ ஃ

காங்கிரஸ்காரரை விட்டு விடுவோம்; காந்திஜியையும் கவனிக்க வேண்டியதில்லை. ஜின்னா, ஹக், சிக்காந்தர் போன்றவர்கள், வைசிராயிடம் எத்தனையோ முறை சென்றார்கள். எத்தனையோ முறை கண்டு பேசினார்கள்; இதுவரையில் வைசிராய், பிரிட்டிஷாரின் அந்தரங்க நோக்கமென்னவென்பதை அவர்களிடமாவது ரகசியமாகத் தெரிவித்திருப்பாரா? நான் நம்பவே இல்லை. அப்படி ஏதேனும் கூறியிருப்பாரேயாயின், சிக்காந்தரோ, அல்லது, ஜின்னாவோ வெளியில் சொல்லட்டும். காங்கிரசும், காந்திஜியும்செய்தது தவறு என்று, உடனே நாடெங்கும் கண்டிக்கலாம். ஏன்? உலகமெங்குமே கண்டிக்க வேண்டியதுதான். அந்த ரகசியம் வெளி வந்தால், சிக்கந்தர் கோரும் யுத்த உதவி இன்னமும் ஏராளமாகக் கிடைக்குமென்பதில் சந்தேகமே இல்லை. பிரிட்டிஷாரிடம் சிக்காந்தருக்கு ஏதோ பிரமாதமான செல்வாக்கு இருப்பதாக அவர்தான் மனம்பால் குடித்துக்கொண்டிருக்கிறார்! பிரிட்டிஷார் அவரை ஒரு கோபுரப் பொம்மையென நினைக்கிறார்களேயொழிய, வேறு ஒன்றுமில்லை. இந்தச் சிக்கந்தருக்கோ, ஹக்குக்கோ, ஜின்னாவுக்கோ, பிரிட்டிஷார் பயந்திருக்கவில்லை; அவர்களை ஒரு சிறிதளவும் பொருட்படுத்தவுமில்லை.

ஃ ஃ ஃ

சர். சிக்காந்தர் ஹயத்கான் புதல்வர், லெப்டினன்ட் ஷவுகத் ஹயத்கான், எகிப்து போர்முனைக்குச் சென்றிருந்தார்; அங்கு காசாலா என்ற இடத்தில் ராணுவ முகாமில் ரோந்து வந்தபோது, இதாலியரிடம் கைதியானார். இதுவரையில் அவர் எங்கே இருக்கிறார் என்பதே சந்தேகத்திலிருந்தது; அவர் இதாலியரிடம் கைதியாக உயிருடனிருக்கிறார் என்பது இப்பொழுதுதான், தெரிய வந்தது. இதைத் தவிர அவர் குண்டடிபட்டுப் படுகாயமடைந்திருக்கவில்லை; இரத்தஞ் சிந்த அவரை எந்த இதாலியனும் இழுத்துச் செல்லவுமில்லை. பீரங்கி முனையில் மார் காட்டி நிற்கவுமில்லை; கைதியாகி இருக்கிறார். அவ்வளவுதான்; இதில் அதிசயமொன்றுமில்லை. ராணுவத்தில் ஒரு லெப்டினன்ட் பதவியிலிருக்கும் ஒருவர், யுத்த முனைக்குப் போகாமலிருக்க முடியுமா? போய்த்தான் தீரவேண்டும்; இன்றேல், அவர் பதவிக்கு லாயக்கில்லை; அவர் வாங்கும் சம்பளமும் தண்டச் சம்பளம்! சம்பளத்துக்குச் சேவை செய்யவே, அவர் எகிப்து போர்முனைக்குச் சென்றார். அது அவருடைய கடமை. அதில் தனி வீரமோ, பிரத்தியேகமான சூரத்தனமோ இல்லை. சர். ஹயத்கான் புதல்வர் மட்டுமா யுத்த முனைக்குப் போயிருக்கிறார்? எத்தனையோ லக்ஷக்கணக்கான பாரத மக்கள் போயிருக்கிறார்கள்; எத்தனையோ ஆயிரக்கணக்கான பாரத மக்கள், யுத்த முனையில், பீரங்கிகளுக்கு மார்காட்டிப் போர்முனையில் மடிந்திருக்கின்றனர். வெடி குண்டுகளுக்கு இரையாகியிருக்கின்றனர்! ஷவுகத் ஹயத்கானைப் போல் அவர்கள் கைதியாகி மட்டும் இருக்கவில்லை; உயிரையே போர்க்களத்தில் அர்ப்பணஞ் செய்திருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் பாரதமாதா புதல்வர்கள் தான்! ஷவுகத் ஹயத்கான் மட்டும் பாரத மாதாவின் விசேஷ புதல்வர் அல்ல; இந்தியாவிலுள்ள 40 கோடி மக்களும் பாரதமாதா புதல்வர்தான். சு. ம. ராமசாமி நாயக்கர்கூட பாரமாத புதல்வரே! இந்தியாவைக் கண்ட துண்டமாக்க வேண்டுமென்று ஓயாமல் கூறிவரும் ஜின்னாகூடப் பாரதமாதா புதல்வர்தான்! இன்று தாய்நாட்டின் விடுதலைக்காகக் கைதியாகி சிறையிலிருக்கும் பண்டித ஜவார்லால் முதல், சகல சத்தியாக்கிரகிகளும் பாரதமாதாவின் புதல்வர்களே. ஆனால், புதல்வர்களின் லட்சணங்கள் வேறுபடலாம். பட்டம் பதவிகளுக்காக ஆசை கொண்டுள்ளவர்கள் உண்டு; கூலிக்காக மாரடிப்பவர்கள் உண்டு! தன்னலமறுப்பாலும், தியாகத்தாலும் பாரத தேவிக்குச் சேவை செய்யும் புதல்வர்கள் உண்டு; தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சையெடுக்க, கும்பகோணத்தில் கோதானம் செய்யும் ஊதாரிப் புதல்வருண்டு! தன்னைப் பெற்ற தாய் அடிமைப் படுகுழியில் விழுந்து தவிக்க, அவள் கால்களில் அடிமை விலங்குகள் இறுகப் பிணைக்கக் கண்டு துடிக்கும் புதல்வர் உண்டு; தாயின் விடுதலைக்காகப் போராடத் துணியும் புதல்வருண்டு; தாயை மறந்து, பிறநாட்டின் விடுதலைக்காகப் போராடச் செல்லும் புதல்வர்களுண்டு. இதுதான் பாரத புதல்வர்களுக்குள் இருக்கும் வித்தியாசம்!

ஃ ஃ ஃ

இந்த வித்தியாசத்தை அறிந்து கொள்ள அறிவின்றி, எகிப்து சென்ற ஷவுகத் ஹயத்கானைப் பண்டித ஜவார்லாலுடன் ஒப்பிட்டு, சு. ம. நாயக்கர் அவருக் குரிய அற்பத்தனமான போக்கில் எழுதியிருப்பதைக் காண எந்த இந்தியனின் உள்ளமும் பதறித் துடிக்குமென்பதில் சந்தேகமில்லை. "ஒரு பாரத புதல்வர் குண்டடிபட்டுக் கிடக்கிறார்! மற்றொரு பாரத புதல்வராகிய பண்டித ஜவார்லால் நேரு, வெறும் வாய்க் குண்டு வீசிக், கைதியாகி சிறையில் இருக்கிறார்! ஒருவர் போர்முனையில் பாடு படுகிறார்; மற்றொன்று சிறையில் பல் பிரஷ் கேட்கிறது; பாட்டாளி மக்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிவிட்டு, சிறை சென்று, அங்கே பல் பிரஷ் கேட்கிறது! பல் பிரஷ் வரத் தாமதமாயிற்று; அதற்கு ஒப்பாரி நடக்கிறது! ஒன்றை வீரனாகவும் ஒன்றை வீணனாகவும் ஒரே வயிறு பெற்றதே, அதுவே விந்தை! ஒரு மகன் கடல் கடந்து, இதாலியரிடம் கைதியாகிச் சிறையிலிருக்கிறார்; மற்றொரு மகன், ஜெயில் கதவைத் தட்டித் திறக்கச் செய்து, உள்ளே போய் உட்கார்ந்து கொண்டு, பல பிரஷ் என்று அழுகிறது! என்ன செய்வது? ரோஜா மலரும் செடியில்தான் முள் இருக்கிறது. ஷவுகத் ஹயத்கான் இருக்கும் நாட்டிலேதான், ஜவார்லால்களும் இருக்கிறார்கள்!" என்று சு. ம நாயக்கர் எழுதியிருக்கிறார். ஆம், அந்த நாட்டில்தான் சு. ம நாயக்கர் போன்றவர்களும் இருக்கிறார்கள்! இதை ஏன் அவர் மறந்து போனார்?

ஃ ஃ ஃ

வீரருக்கும், வீணருக்கும் வித்தியாசந் தெரியாத சு. ம. நாயக்கர், அதைப்பற்றி வீணாக ஏன் எழுத வேண்டும்? வீணருக்கு ஈனப்புத்தி தானே இருக்கும்! பண்டித ஜவார்லால் எப்பேர்ப்பட்ட புதல்வர்; எப்பேர்ப்பட்ட வீரர் என்பதை ஊர் அறியும்; உலகமும் அறியும்; பாரத புதல்வர்கள் எல்லோரும் அறிவார்கள். வீரர் வயிற்றில் பிறந்த வீரர், பண்டித ஜவார்லால், எதற்காகச் சிறை சென்றிருக்கிறார்? பல் பிரஷ் கேட்பதற்காகவா, அல்லது, அது கேட்டு அழுவதற்காகவா? இல்லை; தாய்நாட்டின் விடுதலைக்காக; அவர் உயிரையே அர்ப்பணஞ் செய்யவும் தயாராகச் சிறை சென்றிருக்கிறார்! அப்பேர்ப்பட்ட தன்னலம் மறந்த தியாகியை, வீர புருஷரை ஒரு பீரங்கி அல்ல, ஆயிரம் பீரங்கிகள் எதிர்த்தால்தான் என்ன? அந்தப் பீரங்கிகள் அவரைப் பயமுறுத்திவிடாது! ஒரு வெடிகுண்டு அல்ல; ஆயிரம் ஆயிரம் வெடிகுண்டுகள் சரமாரி விழுந்தாலும், வீர ஜவார்லாலின், வச்சிர உள்ளத்தைக் கலக்கி விடாது! எகிப்து போர்முனையல்ல; ஐரோப்பிய போர் முனைகளையே அவர் கண்டார்; ஸ்பெய்ன், சீனா, போர் முனைகளுக்கு, ஆயுதமின்றிச் சென்றார்; தலை நிமிர்ந்து நடந்தார்! லெப்டினண்ட் பட்டம் அவருக்குக்கிடையாது; கூலிக்கு மாரடிக்கவும் அவர் போர் முனைக்குச் செல்லவில்லை; அப்பேர்ப்பட்ட வீர புதல்வரைப் பெற்ற பாரத தேவி, அவள் வயிற்றில் இடித்துக்கொள்ள மாட்டாள்; வீரனைப்பெற்ற அவள் வயிறு ஆனந்தத்தால் துள்ளும்; தன் விடுதலைக்காகச் சிறையில் தவம் கிடக்கும் தவப் புதல்வர்களைக் கண்டு அவள் உள்ளம் பூரிக்கும்; பூரிப்படையும்; அவள் மனம் பெரிதுவக்கும்! ஆனால், அவள் விடுதலையில் நோக்கமின்றி, அவள் அடிமை விலங்கை இறுகப் பிணைக்கத் துணை செய்யும் தூர்த்தரைக் கண்டே, கண்ணீர் சொரிவாள்! கலங்குவாள்!! மனமுடைவாள்!!! இந்தச் சிறிய உண்மைகூட சு. ம. நாயக்கரின் பெரிய மண்டையில் ஏறாது போனது அதிசயந்தான்! ஆம்; சு. ம. நாயக்கரைப் போன்ற பதர்களைத், துரோகிகளை, பாரத தேவி பெற்றெடுத்தாளே, அதற்காக அவளை நொந்து கொள்ளுவதா? இல்லை, இல்லை; தாயை நொந்து கொள்ளுவதால் என்ன பயன்? அவள் தலைவிதியைத்தான் நொந்து கொள்ளவேண்டும்! சு. ம. நாயக்கரைப் போன்றவர்களும் மண்ணில், மனித உருவங்களாக உலாவுகின்றனர்; ஆனால், அவர்கள் மனிதர்களாக வாழ முடியுமா? தாய்நாட்டுக்கு, உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யும் சண்டாளர்களுக்கும், பாரத தேவியின் மக்களென்று சொல்லிக்கொள்ளக்கூடிய யோக்கியதை உண்டா? "நான் தமிழன், திராவிடன், இந்தியன்" என்று சொல்லிக்கொள்ளத்தான் இவர்களுக்கு வாய் வருமா? ஒரு போதும் வராது.

ஃ ஃ ஃ

பண்டித ஜவார்லாலைத் தீண்டிய சு. ம. நாயக்கரின் விஷம் நிறைந்த நாக்கு, வீர சவர்க்காரையும் தீண்டியிருக்கிறது! "சிவாஜியின் சாம்ராஜ்யத்தைச் சிதைத்தவர்கள் மராட்டிய பார்ப்பனர்; அதாவது, பீஷ்வாக்கள். அந்தப் பீஷ்வாக்கள் பரம்பரைதானே சவர்க்கார்; அதற்கு ஏற்றபடியே அவருடைய போக்கும், போரும் இருப்பது காணலாம்! திராவிட நாட்டிலே எதற்காக இவர் நுழையவேண்டும்? இவர் குறிப்பிடும் ஹிந்து-முஸ்லிம் பிரச்னை இங்கு கிடையாதே!" என்று நாயக்கர் சொல்லுகிறார். ஆம்! பீஷ்வா வழி வந்த சவர்க்காருக்குத் திராவிட நாட்டில் நுழைய உரிமை இல்லையென்றால், பாண்டிய நாட்டிற்குத துரோகஞ் செய்த, கன்னடம் நாயக்கருக்குத் தமிழ் நாட்டில் நுழைய என்ன உரிமை இருக்கிறது? ஹிந்து-முஸ்லிம் பிரச்னையோ தமிழ் நாட்டில் கிடையாது; அப்படி இருக்க, முஸ்லிம்களை இந்த சு. ம. காரரும், சு. ம. நாயக்கரும் தட்டிக்கொடுப்பானேன்? தமிழ் நாட்டில் ஹிந்து-முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருந்து வருவதுபோல் வேறு எங்கும் இருந்து வருவதைக் காண முடியாது. சு. ம. நாயக்கரும், அவருடைய குலாங்களும் தலையெடுத்தபின்தான், தமிழ் நாட்டில் கூடச் சிறிது பிணக்குத் தலைகாட்டியது. இந்தப் பழியைச் சு. ம. காரர் காங்கிரஸ்காரர்மீது போடுவது சுத்த அகம்பாவம், அக்கிரமம்; ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் காங்கிரஸ்காரர் வளர்த்தார்களேயொழிய, அதைச்சிதைக்க அவர்கள் நினைத்ததே இல்லை. சிதைத்து வந்த சண்டாளர் சு. ம. காரரே! இதைச் சு. ம. காரர் மறைக்கலாம்; அல்லது, மறுக்கலாம். ஆனால், உண்மை என்னவென்பதைத் தமிழர் அறிவார்கள். தமிழரை இனிமேல் ஏமாற்ற முடியாது.

-: மனோரதம் :-

கானல் நீர் மாய்கை!

ஆண்டி வேஷமே!

"லிபி" எப்படி இருக்கிறதோ?

பெட்ரோலுக்குப் பிச்சை!

வெறும் தண்டச் செலவு!

வெள்ளையரிடமிருந்து விடுதலை செய்து, ஆசியாவில் ஒரு ஜப்பான் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்ட ஜப்பான் விரும்புவதாக ஜப்பான் மந்திரிகள் சொல்லுகிறார்கள்! அந்த ஜப்பானுடன் உறவு கொண்டாடிவரும் பிரிட்டன், ரஷியாவிடம் ஏன் நம்பிக்கை வைக்கக் கூடாது? ரஷியா, இந்தியாமீது பாயக்கூடுமென்ற பயம் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், அந்தப் பயத்துக்கு இடமே இல்லை. ரஷியாவைப் பகைப்பதால் மட்டும் அந்தப் பயம் தெளிந்துவிடுமா? ஒருபோதும் தெளியாது. ரஷியாவுடன் உறவு கொண்டாடுவதால் அந்தப் பயத்தைப் போக்கலாம்; பகைப்பதால் அந்தப் பயத்தைப் போக்க முடியாது. இன்று பிரிட்டன் எந்த நிலைமையில் இருக்கிறதோ, அந்த நிலைமையில்தான் ரஷியாவும் இருக்கிறது, என்று லார்ட் ஸ்ட்ராபோல்டு கூறுகிறார். இன்று பிரிட்டனை, ஜெர்மனி எதிர்த்து நிற்கிறது; ஆனால், ரஷியாவுடன் உறவு கொண்டாடுகிறது. இந்த யுத்தம் முடிந்த பின், இதே ஆபத்தே ரஷியாவுக்கும் ஜெர்மனியால் ஏற்படலாம். ஆகவே, இந்த ஆபத்தான நிலைமையில், ரஷியாவும், பிரிட்டனும் ஒன்றுபடவேண்டும். துருக்கியும், சீனாவும் நல்ல பலத்துடன் இருந்தால்தான், பிரிட்டனுக்கும், ரஷியாவுக்கும் நல்லது; அந்த இரு நாடுகளையும், பிரிட்டனும், ரஷியாவும் ஆதரித்து வருகின்றன. அப்படியானால், ரஷியாவுடன் பிரிட்டன் ஏன் உறவு கொள்ளக்கூடாது? பிரிட்டனுக்கும், ரஷியாவுக்கும் நெருங்கிய நட்பு ஏற்படுமேயானால், ஹிட்லர் பால்கன் நாடுகளில் வாலாட்டும் எண்ணத்தையே விட்டுவிடுவார். மத்தியதரக் கடல்மீதும் எகிப்துமீதும் அவர் படையெடுக்கும் எண்ணம் கானல் நீர்போல் வெறும் மாய்கையாகிவிடுவது திண்ணம்! ரஷியாவை ஆழம் பார்ப்பதில் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் மூளையைச் செலுத்துகிறார்களேயொழிய, ரஷியாவுடன் உறவு கொண்டாடுவதில் அவர்கள் மூளை செல்லவில்லை! ரஷிய-பிரிட்டன் உறவு ஏற்பட்டாலொழிய ஹிட்லரின் கொட்டத்தை அடக்குவது கஷ்டமாகவே முடியும்.

ஹிட்லர் பூனைபோல் பதுங்கி இருக்கிறார். அவர் பதுங்குவதின் நோக்கம் திடீரெனப் பாய்வதற்குத்தான். நெடுநாட்காலம் பதுங்கியிருந்து, காலத்தை வீணாக்க ஹிட்லரால் முடியாது; அவர் சீக்கிரத்தில், அல்லது, இன்னும் இரண்டொரு வாரங்களில், யுத்தத்தை மும்முரமாக நடத்தியே தீரவேண்டும். அப்படியானால், பிரிட்டனும் அதற்குத் தயாராக இருக்க வேண்டியதுதான். யுத்தத்தை மும்முரமாக நடத்தவே ஹிட்லர் இதாலியிலும், இதாலிக்குச் சொந்தமான ஸிஸிலித் தீவிலும், பால்கன் நாடுகளிலும் காலை வைத்திருக்கிறார். இது பிரிட்டனுக்குத் தெரியும்; தெரிந்திருந்தும் பிரிட்டன் சும்மா இருக்கலாமா? கூடாது. இப்பொழுதே இதாலியை எதிர்த்து, அங்குள்ள ஜெர்மன் ராணுவங்களையும், விமானப் படைகளையும் சிதறடிக்க வேண்டும்; அவ்வாறு சிதறடிக்கப்பட்டால் வெற்றி பிரிட்டனுக்கே. இதாலியில் ஜெர்மன் ராணுவங்களை நசுக்கிவிட்டால் அப்புறம் ஜெர்மனியைத் தனித்துப் போராடுவது எளிது. நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஜெக்கோ, போலந்து, முதலிய நாடுகளில் ஜெர்மனிக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. அந்த எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் நாஜியர் திணறுகின்றனர். ஹிட்லர் யுத்தத்தைத் தீவிரமாக நடத்த யோசனை போடுவதற்கு இதுவும் ஒரு காரணம். இது பிரிட்டனுக்கு நல்ல சந்தர்ப்பம்; இந்தச் சமயத்தில் அச்சு நாடுகளை நாலா பக்கமும் முறியடித்தால், இன்று அடிமைப்பட்டிருக்கும் நாடுகளுக்குக் கொண்டாட்டமாக இருக்கும்; அங்கு குமுறிக் கொண்டிருக்கும் அதிருப்தி அதிகரிக்கும்; பிரிட்டனுக்குச் சாதகமான எண்ணம் ஏற்படும். உள்ளும், புறமும், ஹிட்லருக்குக் கவனஞ் செலுத்தமுடியாது; அவர் திண்டாடுவார், ஆகவே, பிரிட்டனுக்கு இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இந்தச் சந்தர்ப்பத்தையே பிரிட்டன் நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இந்த யுத்தமே கடைசி யுத்தமாக இருக்கும்படி செய்யவேண்டும். நாஜி ஜெர்மனியை முறியடித்து, ஹிட்லரையும், முஸோலினியையும் தரை மட்டமாக்க வேண்டும். இரு சர்வாதிகாரிகளும் மண்ணைக் கவ்வினால், கிழக்கே ஜப்பான் வாலாட்ட முடியாது; கிழக்கேயுள்ள தேசங்களுக்காக ஜப்பான் முதலைக் கண்ணீர் வடிக்கவும் இயலாது வாலை மடக்கிக் கொண்டு, கிழக்கே தலைகாட்டத் துணியாமல் பதுங்கிவிடும்!

ஃ ஃ ஃ

அமெரிக்காவின் உதவி பிரிட்டனுக்கு எப்படியும் கிடைத்தேதீரும். உதவி கிடைப்பதோடு மட்டுமல்ல; அமெரிக்காவே யுத்தத்தில் சேர்ந்து கொள்ளவும் கூடும். அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் செய்திகளைப் பார்த்தால், அமெரிக்கா அடுத்த ஏப்ரல் மாதத்துக்குள் இந்த யுத்தத்தில் சேர்ந்துகொள்ளக் கூடுமென்று தெரிகிறது. அப்படியானால், பிரிட்டன் வெற்றியைப்பற்றிச் சந்தேகமே இல்லை. ஆனால், அமெரிக்காவின் உதவி கிடைக்கும்படியான நிலைமை ஏற்படுத்தவேண்டியது பிரிட்டனின் கடமை. ஜனநாயகத்துக்குத் திலகம்போல் விளங்கும் அமெரிக்கா. ஜனநாயகத்தை ஆதரித்தே தீரும். ஜனநாயகம் என்று சொல்லிக்கொள்ளுவது மட்டும் கூடாது; அல்லது, ஜனநாயகமே பிரிட்டனின் ஒரே லட்சியம் என்று அமெரிக்காவில் பிரசாரஞ் செய்வது மட்டும் போதாது; உண்மை ஜனநாயகத்தை ஆதரிக்க வேண்டும்; இதற்கு இந்தியா நல்ல உதாரணமாக இருக்கிறது. இந்தியாவில் ஜன நாயகத்தை ஏற்படுத்துவதே பிரிட்டிஷாரின் நோக்கம் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி கொடுக்க வேண்டியது பிரிட்டிஷாரின் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றிவைப்பார்களேயானால், பிரிட்டனுக்கு அமெரிக்காவின் உதவியும், இந்தியாவின் உதவியும் பரிபூர்ணமாகக் கிடைக்கும். பிரிட்டிஷார் கூறுவதுபோல் ஐரோப்பாவிலும், இதர நாடுகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும். ஆனால், அந்தவிதமான ஜனநாயகத்தை நிலைநிறுத்தப் பிரிட்டன் தயாரா? பொறுத்துப் பார்ப்போம்.

ஃ ஃ ஃ

ஹிட்லரின் வெற்றி சந்தேகந்தான்; இந்தச் சந்தேகம் எனக்கு மட்டுமல்ல; ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கும் இந்தச் சந்தேகமுண்டு. ஹிட்லரின் சகாக்களான கோரிங், கோபல்ஸுக்குக்கூடச் சந்தேகமே! அவர்கள் தோல்வியை அறிந்தே, கோரிங் சுமார் 10 லக்ஷம் பவுன் பெறுமதியுள்ள, அவருடைய

(அடுத்த பக்கம் பார்க்க)

நயம் பெத்தாபுரம் ஸில்க்
அங்க வஸ்த்திரங்கள்

$2\frac{1}{4}$x5 வெண்பட்டு	1-க்கு ரூ.	1-6-0
—ஜன்	1-க்கு ரூ.	15-0-0
3x8 வேஷ்டி	1-க்கு ரூ.	3-0-0
$2\frac{3}{4}$x14 ஸில்க் சாரி	1-க்கு ரூ.	4-0-0
ஷை x12 ஸில்க் சாரி	1-க்கு ரூ.	3-8-0

P. ராமசாமி, ஸில்க் அவுஸ்,
கோட்டார் P. O. திருவிதாங்கூர்

ஹநுமான் ஆருடம்

எதிர்கால சம்பந்தமாக 5 கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 1. ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத ரூ. 3. வாராந்திர பலன் ரூ. 10. வி. பி. 0-4-0. ஜனன விவரம் or சுமார் வயது, தொழில், எழுதியநேரம் தேவை.

ஹனுமான் ஆச்ரமம்,
திருத்தணி.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்.
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜண்டுகள் தேவை)

இருமலை இன்றே ஒழி!
எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவது
துரும்பிலேயே கிள்ளி எறிந்தால் இந்தத் துன்பமேன்!
ஆனாலும் பரவாயில்லை

சி. எம். சாமி
தாளகபஸ்பம்

இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டை வலி, மார் துடிப்பு, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகளையும் குணப்படுத்துகிறது. மார்பிலும் தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து, கபத்தை அறவே ஒழித்து சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்துகிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0 தபால் சார்ஜ் வேறு.

தலைமை ஆபீஸ்:—
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

பிராஞ்சு:- (1) 24 சாமி நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 195, செட்டியார் தெரு. கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மனோரதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

முத்து மாலைகள், வைர மாலைகளை இதாலி பாங்கிகளில் கொண்டு போய் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்! கோபல்ஸ், தென் அமெரிக்காவிலுள்ள பாங்கிகளில் ஏராளமான பணத்தைப் போட்டுவைத்திருக்கிறார். ரிப்பன்டிராப், அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய யூதப் பணக்காரரிடம் பணத்தைக் கொடுத்து வைத்திருப்பதாகக் கேள்வி. ஜெர்மனி தோல்வியடைந்தால், அவர்கள் மூட்டை கட்டிக்கொண்டு ஓடுவதற்கு இப்பொழுதே தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள் போலும்! ஹிட்லர் எந்தத் திசை நோக்கி ஓடப்போகிறாரோ தெரியவில்லை! அவரும், அவருடைய பிற்கால வாழ்க்கைக்கு ஏதேனும் முன் ஏற்பாடுகள் செய்யாமலிருக்கமாட்டார். அப்படி முன்னேற்பாடு செய்யாமலிருந்தால், அவர் ஒரு ஆண்டியாக நாடு சுற்றித் திரியவேண்டியதுதான்! இன்றேல், முன்போல் "பிரஷைக்" கையில் எடுக்கவேண்டியதுதான்! ஹிட்லர் "லபி" எப்படி இருக்கிறதோ இந்த வருடத்தில் அல்லது இன்னும் இரண்டொரு வருஷங்களில் தெரிந்துவிடும்!

ஃ ஃ ஃ

பிரிட்டன்மீது படையெடுப்பதைப்பற்றி, ஹிட்லர் பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிறார். ஆனால், அதனால் நஷ்டம் பிரிட்டனுக்கா, ஜெர்மனிக்கா என்பதை அவர் அறியவில்லை; நஷ்டம் ஜெர்மனிக்குத்தான்; அவர் தொடர்ந்து படையெடுப்பாரேயானால், "இன்சால் மென்ட்" கொடுக்க வேண்டியதுதான். பெட்ரோலுக்குப் பிச்சையெடுக்க வேண்டிய நிலைமைக்கு ஜெர்மனி வந்துவிடும்! சுமார் 200 நாஜி விமானங்கள், பிரிட்டன்மீது படையெடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால், சில மணி நேரத்துக்குள், சுமார் 2,50,000 பவுன் ஜெர்மனிக்குத் தண்டச் செலவு! இதில் 10, அல்லது. 15 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுமேயாயின் இந்த நஷ்டம் இன்னமும் அதிகமாகும். பெட்ரோல் மட்டும் சில மணிக்குள் சுமார் 5,000 காலனாகும்; அதாவது, சுமார் 1500 பவுன்; எண்ணெய் 300 பவுன் வெடிகுண்டுகள் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் பவுன்; இதர செலவுகள். 25,000 பவுன். இந்தத் தண்டச் செலவை ஜெர்மனி எவ்வளவு காலத்துக்குதான் தாங்கிக்கொண்டிருக்க முடியும்? அதனால் நஷ்டமேயொழிய, லாபமல்ல; விமானப் படையெடுப்பால் பிரிட்டனை ஜெயிக்க முடியாதென்பது நன்றாகத் தெரிந்துவிட்டது; ஆகவே, ஹிட்லர் விமானப் படையெடுப்பை நீடித்த காலம் நடத்த முடியாது. அவர் வேறு வழியில் பிரிட்டன்மீது படையெடுத்தே தீரவேண்டும். அதற்காகத்தான் யோசனை போட்டுக்கொண்டிருக்கிறார். அவருடைய யோசனை என்னவென்பது இன்னும் இரண்டொரு வாரங்களில் தெரிந்துவிடும். அதைப் பற்றி அப்புறம் தெளிவாகக் கூறுகிறேன்.

இன்புளுயன்ஸா, குளிர் ஜுரங்களுக்கு ஸி. ஏ. க்யூ

-: சாப்பிடுங்கள் :-

இந்தியா முழுவதும் ஸ்பென்சரின் ஸி. ஏ. க்யூ சிறந்த நிவாரணி என பிரசித்தமானது. முறை ஜுரம், குளிர் காய்ச்சல், சீதளம், ஜலதோஷம் இவைகள் வராமல் தடுப்பதிலும், நிவர்த்திப்பதிலும் நிகரற்றது. சீக்கிரம் குணம் தரும். வைத்தியர்களால் பத்திரமும் நிச்சயமுமான நிவாரணி என்று சிபார்சு செய்யப்பட்டது.

குளிர், ஜலதோஷம், இன்புளுயன்ஸா வராமல் தடுப்பதில் ஸ்பென்ஸரின் ஸி. ஏ. க்யூ மகாச் சிறந்தது. சிகிச்சையில் இதற்கு நிகரில்லை.



புட்டி விலை ரூ. 1.

காப்ஸல்ஸ் 14 அணா.

ஸி. ஏ. க்யூ என்பது ஒன்றுதான்.
அதை ஸ்பென்ஸர் கம்பெனியார் தயாரிக்கிறார்கள்.

தேவைகளுக்கு எழுதுக:—

ஸ்பென்சர் & கம்பெனி லிமிடெட்.,

மருந்து தயாரிப்பவர்கள் மதராஸ்.

ஆனந்த பொக்கிஷம்

அல்லது,

நிச்சயமான ஆண் குழந்தை

ஆசிரியர்:—

R. புருஷோத்தமன்.

ஆனந்தமான குடும்ப வாழ்க்கை, நிச்சயமான ஆண் குழந்தை, நீண்ட ஆயுள் பெறும் வகை, திடகாத்திர சுக வாழ்க்கை முதலியவை வெகு தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

பெண்களுக்குச் சிறந்த பரிசு
புது விவாகமான தம்பதிகளுக்கு மிக மிக அவசியம்.

விலை அணா. 4.

எல்லாத் "தமிழ் மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

0-4-9 ஸ்டாம்புகள் அனுப்புவோருக்குத் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

மானேஜர்:—
"தமிழ் மணி"
மதராஸ்.

உயர்ந்த குணம்! ★ குறைந்த விலை!!

பிராணாமிர்தம்

சகல ரோகங்களுக்கும், இவ்வொரு மருந்தே உத்திரவாதம்; வாந்திபேதி முதல் குழந்தைகளின் சகல மாந்தபேதிகள் வரையில், பாரிசவாய்வு, ஜன்னி, சூலை முதலிய நோய்கள் ஒரு வேளை மருந்தில் குணம் தெரியும்; இராஜ கட்டி முதல் படை வரையில், மேல் பூசி குணமடையலாம்.

இதன் விலை — 1 (அவு) ரூ. 2-0-0 $\frac{1}{4}$ (அவு) ரூ. 0-8-0 ; $\frac{1}{2}$ (அவு) ரூ. 1-0-0 $\frac{1}{8}$ (அவு) ரூ. 0-4-0 { வி. பி. பிரத்தியேகம்.

கிடைக்குமிடம்:—சரவண பவாநந்த சஞ்சீவி நிலையம்,
40, வெங்கடராமையர் தெரு, ஜி. டி. மதராஸ்.

M. A. CHARI & Co.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

மாதர் அங்க லக்ஷணம்

இது ஓர் லக்ஷண சாஸ்திரம். ஸ்திரீயின் பாதம் முதல் தலை மயிர் வரையில் உள்ள எல்லா அவய லக்ஷணங்களையும், அவைகளின் பலன்களையும் விவரமாக கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை 0—12—0

ஆனால் இது சமயம் 6 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் புஸ்தகம் அனுப்பப்படும். உடனே எழுதுங்கள்.

மானேஜர்:- மாருதி ஏஜன்ஸி திருத்தணி S. India.

தேவி பஸ்பம்
காசம், க்ஷயம், இருமல், இளைப்புக்கு
ஒப்புயர்வற்ற, நிவாரண சஞ்சீவி.
விபரங்களுக்கு
சக்தி நிலையம்_தூத்துக்குடி

மாய வெளிச்சம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

டால், வயிற்றுச் சோற்றில் மண் விழுந்து விடுமேயென்ற பயம் மற்றொரு பக்கம் அவனை வாட்டியது.

"இனிமேல் நந்தவனத்தில் இருப்பதால் பயனில்லை....பேசாமல் வீடு போய்ச் சேருவோம்..." என்றான் ஒற்றன்.

"ஆம்; போகவேண்டியதுதான்... ஆனால், ராணி என்ன கதியானாளோ தெரியவில்லையே! அந்தப் பேயிடம் அகப்பட்டு அவள் உயிர் போயிருக்குமோ என்னமோ அதுவும் தெரியவில்லையே?..."

"நாம் என்ன செய்ய முடியும்?... அப்பொழுதே சொன்னேனே; கேட்டீர்களா?...நாம் ராணியைத் தேடிப் போகாமல், அரண்மனை வாசலில் நின்று கொண்டிருந்தால், அந்தப் பேய் மீண்டும் வந்திருக்காது... நம்மைப் பயமுறுத்தவும் துணிந்திருக்காது!...நாம் அங்கேயே காத்திருந்து, பொழுது விடிந்ததும் ராணியைத் தேடி யிருக்கலாம்..."

"மெய்தான்...நான்தான் புத்தியைக் கடன் கொடுத்து விட்டேன்! சரி போகட்டும்; இனிமேல் நாம் ராணியைத் தேடிச் செல்லுவதால் பயனில்லை..."

"சரி; உங்கள் யோசனைதான் என்ன?......பேசாமல் வீடுபோய்ச் சேருவோம்..."

"இல்லை; நீ சொன்னதுபோல் இந்த இடத்திலேயே தங்கியிருந்து, பொழுது விடிந்ததும் ராணியைத் தேடிப் பார்ப்போம்..."

"என்ன! பொழுதுவிடியும் வரையில் இங்கேயே தங்கியிருப்பதா?"

"ஆம்;...அதுதான் நல்லயோசனை யென்று நினைக்கிறேன்..."

"அப்படியானால், நீங்களே இங்கு இருங்கள்...என்னால் இருக்க முடியாது...அந்தப் பேய் நம்மையும் பழி வாங்க இங்கு வந்தால்..."

"இங்கு வராது...அந்தப் பயமுமே உனக்கு வேண்டாம்..."

"வந்துவிட்டால்?..."

"நந்தவன வேலைக்காரரைத் தட்டி யெழுப்பி, நமக்கு உதவி தேடிக் கொள்ளலாம்..."

"பேய் வந்தபின் வேலைக்காரரை எப்படித் தட்டி எழுப்புவது?... நமது உயிரோ போய்விடும்...உயிர் போனபின் ஆயிரம் வேலைக்காரர் வந்துதான் என்ன பயன்!..."

"நீ சும்மா இரு...பேயும் வராது, பூதமும் வராது! அப்படியே வந்தால் தகுந்த பந்தோபஸ்து செய்து கொள்ளலாம்...இந்தப் பேய், பூதங்களிடம் எனக்கு நம்பிக்கையே கிடையாது. நான் பயந்ததுமில்லை..."

"இப்பொழுது எப்படிப் பயந்தீர்கள்?..."

"என்னை நீ தான் முதலில் பயங்காட்டினாய்......இதற்கு முன்னும் ஒருமுறை இப்படியே பயந்து போனேன்...அப்பொழுது என்னை அந்த ரஞ்சிதந்தான் காப்பாற்றினாள்..."

"யார்? ரஞ்சிதமா?..."

"ஆம், ரஞ்சிதம்...ரஞ்சிதத்தை உனக்குத் தெரியுமா?..."

"ரஞ்சிதத்தை எனக்குத் தெரியாதா?...அந்த ரஞ்சிதம்...எனக்கு எனக்கு..." என்று இழுத்தான் ஒற்றன்.

"என்ன இழுக்கிறாய்?...ரஞ்சிதம் உனக்கு எப்படித் தெரியும்?...உள்ளதைச் சொல்...இல்லாவிட்டால் பார்த்துக்கொள்..."

"ரஞ்சிதமா?...எனக்குக் கொஞ்சம் சொந்தந்தான்..."

"உனக்குச் சொந்தமா?...எப்படி?..."

"என் அப்பா வழியில் கொஞ்சம் சொந்தம்....எங்கப்பாவுக்கும்....ரஞ்சிதம் பாட்டிக்கும்..."

"சரி தொலைந்து போகிறது... ரஞ்சிதம் எங்கே இருக்கிறாள்..."

"ரஞ்சிதமா? ராணியம்மாவுடன் தானிருந்தாள்..."

"ராணியுடனா?...நான் காணவில்லையே?..."

"அவளுடைய சொந்த அறையில் இருந்திருப்பாள்..."

"இருக்கலாம்...ரஞ்சிதம் இருந்திருந்தால், ராணி ரஞ்சிதத்தை அழைத்துக்கொண்டு வராமல், தனிமையாக நம்மை அழைத்துக்கொண்டு நந்தவனத்துக்கு வந்தே இருக்கமாட்டாள்..."

"ஒருவேளை ரஞ்சிதம் இந்த ரகசியத்தை அறியக்கூடாது என்று எண்ணி, ராணி தனிமையாக நம்மை அழைத்துக்கொண்டு வந்திருக்கலாம்! ரஞ்சிதத்தை உங்களுக்கு எப்படிப் பழக்கம்?..."

"ராணி என் அக்காள்...ராணியிடமே ரஞ்சிதம் இருக்கிறாள்; என் அக்காளுக்கு அவள் அந்தரங்கத் தோழி"

"ஓகோ! இப்பொழுது அறிந்து கொண்டேன். 'ஏதோ ஒரு பேயிடமிருந்து' உங்கள் உயிரைக் காப்பாற்றினாள் என்று சொன்னீர்களே அந்தப் பேயும் இங்குதான் வந்ததோ?..."

"இல்லை...அதுவேறிடம்; அதைப் பற்றி இப்பொழுது பேசிக்கொண்டிருக்க நேரமில்லை...அது பெரிய வேலை...பெரிய பேய்!..."

"பெரிய பேயா? அதைப்பற்றி என்னிடம் சொல்லக்கூடாதோ?..."

"இப்பொழுது பேசவேண்டாம்; சாதாரண காலத்தில் அதைப்பற்றி நினைத்தால்கூட என் தேகம் நடுங்கிவிடும்!...இந்நேரத்தில் அதைப்பற்றி பேசினால் நான் இங்கு இருக்கவே முடியாது...சதாரணமாக அதைப்பற்றிச் சொல்லுகிறேன்...இப்பொழுது எனக்கு ஒரு யோசனை தட்டுப்படுகிறது...பழைய மண்டபத்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தது ஒரு பெண் என்று சொன்னாயல்லவா?..."

"பெண்ணென்று நான் நிச்சயமாகச் சொல்லவில்லையே!......பெண் போல் இருந்தது என்று தானே சொன்னேன்..."

"அது பெண்ணென்றே வைத்துக் கொள்ளுவோம்; பெண்ணாயிருந்தால் அது யாராக இருக்கக்கூடும்?"

"அது யாரோ நான் எப்படிச் சொல்ல முடியும்?...அரண்மனையிலுள்ள பெண்கள் எனக்குத் தெரியாது...உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்..."

"ஆம்...அது ரஞ்சிதமாக இருக்குமா?..."

"யார்? ரஞ்சிதமா! ரஞ்சிதமா கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள் அட பாவமே!..."

"ரஞ்சிதமென்று சொல்லவில்லை. ரஞ்சிதமாக இருக்குமா என்றுதான் கேட்டேன்...ராணியும், ரஞ்சிதத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை."

"அப்படியானால், ரஞ்சிதத்தைக் கொலை செய்யத் துணிந்தவர் யார்?...அரண்மனையில் ரஞ்சிதத்துக்கு விரோதிகள் யார் இருக்கிறார்கள்?...ராணியாகத்தானிருக்க வேண்டும்!..."

"சீ! மூடமே சும்மா இரு ரஞ்சிதத்துக்கு விரோதிகள் நிறைய உண்டு..."

"ஆனால், யாரும் ரஞ்சிதத்தின் அருகில்கூட நெருங்க முடியாது... அவ்வளவுக்கு அவள் கை தேர்ந்தவள்!..."

"மெய்தான்; ரஞ்சிதம் கொலை செய்யப்படா விட்டால், அது அரண்மனையிலுள்ள வேறொரு பெண்ணாக இருக்கலாம்..."

"வேலைக்காரிகளாக இருக்கலாம்."

"சீ!...வேலைக்காரி யாரும் இந்த இரவில் போகமாட்டார்கள். வேலைக்காரிகளைக் கொலை செய்யக் கூடியவர்களுக்கு நந்தவனம் ஏற்ற இடமா?..."

"ஏன்? வேலைக்காரப் பெண்கள் இல்லையா?..."

"வேலைக்காரிகள் யாரும் எளிதில் நந்தவனத்துக்கு வர முடியாது... நந்தவனத்துக்கு வருவதாக இருந்தால் இளவரசியின் அந்தப்புரமாகத்தான் வரவேண்டும்..."

"இப்பொழுது நாம் வரவில்லையா?...அதுபோல்..."

"நாம் நெடுநேரத்துக்குப் பின் வந்திருக்கிறோம்...அந்தப்புர சேவகன் இல்லை...மேலும், நாம் நந்தவன வாசல் வழியாகச் சென்றதால் தப்பித்துக் கொண்டோம்; வெளியிலிருந்து, அதாவது, அரண்மனைக்குள்ளிருந்து இலகுவில் வரவே முடியாது..."

"அப்படியானால், உங்களுக்கு வேறு யார்மீதும் சந்தேகமிருக்கிறதா?..."

"ஆம்; அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இளவரசியோ, அல்லது, அவளுடைய அந்தரங்கத் தோழியோ... தற்கொலை செய்து கொண்டிருக்கலாமா?..."

"யார்?...என்ன சொன்னீர்கள்? இளவரசியா?...கமலமா?..." என்று சொல்லிக்கொண்டே ஒற்றன் திடீரென எழுந்தான். அந்நேரத்தில் அவர்களுக்குப் பக்கத்தில் பொத்தென்று ஏதோ வந்துவிழுந்தது, படீரென்று வெடித்துப் புகைக்கியது. மின்னல்போல் ஒரு வெளிச்சம் தோன்றி மறைந்தது! அதே நேரத்தில் மண்டபத்திலிருந்தும் அந்த மாய வெளிச்சம் அவர்கள் இருந்த திசை நோக்கி ஓடிவந்தது! அங்கப்பனும், ஒற்றனும், எழுந்து ஓடவும் சக்தியற்று இருந்த இடத்திலேயே மரம்போல் சாய்ந்தனர். மின்னல் போன்று வீசிய வெளிச்சத்தில் அவர்கள் கண் குருடாயிற்று! இருவருக்கும் பேச்சு மூச்சில்லை. ஆனால், அவர்களை நோக்கிவந்த மாய வெளிச்சமும் திடீரென நந்தவனத்தில் மறைந்தது!

(தொடரும்)



ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2224

புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேசமுதலியார்

உயர்தர இரும்பு பெட்டிகள், பிரேக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள், இதர மிஷனேரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59, பிராட்வே, மதராஸ்.



ஏன் கவலை! இதோ!

உலகப் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

வாங்கி உபயோகியுங்கள். தேக பலத்தையும், ஞாபக சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், தாரணை சக்தியையும் கொடுத்து இன்ப சுகங்களை யடையச் செய்யும்.

16 நாட்களுக்கு வேண்டிய ஒரு டப்பி 32 மாத்திரைகள் விலை ரூ. 1.

இனம்! காம சாஸ்திரம் இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26, பிராட்வே, மதராஸ்.

இந்தியா
தனிப் பிரதி
விலை ஒரு அணா.
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0
இலங்கையில்
தனிப் பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி



பர்மா
தனிப் பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.
மலாய்
தனிப்பிரதி சதம்10
வருட சந்தா ரூ. 7.
ஒரு வருஷத்திற்கு
குறைந்த சந்தாவுக்
குப் பத்திரிகை
அனுப்பப்பட மாட்
டாது.

ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தனியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

கெற்ப சஞ்சீவி எண்ணெ!

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை, அந்த க்ஷணமே நிறுத்தும். சூதகக்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதகக் கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினல் உண்டாகும் தலை வலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு சொம்பு ஜலங்கூடத் தூக்க முடியாத பலஹீனம், கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றங்களையெல்லாம் தீர்த்து, கெற்பப்பை சுத்தீகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும் 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது உண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும். கை பார்க்க நேரில் வரவேண்டியதில்லை. எழுதினல் போதும்.

கியாட்லாக் இனம். ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

தபால் செலவு வேறு.

வைத்திய ஆசிரியர் **ஆர். எம். கே. வேலுசாமி,**

சித்த வைத்தியசாலை, பழனி.

பிராஞ்சுகள்:—

சென்னை:-16, திருவல்லிக் கேணி எஹரோடில் எனது சகோதரர் டாக்டர். நாராயண சாமி R. I. M. P. இருக்கிறர்.

கொழும்பு:— 68, செட்டியார் தெருவில் எனது சகோதரர் டாக்டர். கருப்புசாமி R. I. M. P. இருக்கிறர்.

யாழ்ப்பாணம்:— எனது குமாரர் டாக்டர். சிவசுப்பிரமணியம் R. I. M. P. இருக்கிறர்.

சமீபமாக உள்ளவர்கள் நேரில் சென்றல் உங்கள் வியாதிகளை பரிக்ஷித்து நேரில் தகுந்த மருந்துகளைக் கொடுத்து சுகப்படுத்துவார்கள்.

முந்துங்கள் ! முந்துங்கள் !!

சொற்பப் பிரதிகளே கைவசம் இருக்கின்றன.

சொக்கநாதன்

அல்லது

ரங்கன் திருவிளையாடல்

காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நாவல்

முதல் பாகம்
விலை அணு 12.
எல்லா "தமிழ்மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர்:—
"தமிழ்மணி"
மதராஸ்.

நீங்கள் சென்னைக்கு வந்தால்...?

தங்கியிருப்பதற்கு வசதியான இடம்;

ஹோட்டல் எவரஸ்ட்

60 நல்ல காற்றேட்டமுள்ள வசதியான அறைகள். 60

சென்ட்ரல், எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன்களுக்குச் சமீபத்தில் இரு ஸ்டேஷன்களுக்கும் மத்தியில் டிராம், பஸ்கள் ஓடிக் கொண்டிருக்குமிடத்தில் அமைந்துள்ளது.

மனதுக்கினிய சுத்தமான ஆகாரம் நியாயமான சார்ஜ்

மூலவியாதிகளுக்கு

கருணைக்கிழங்கு லேகியத்தைச் சாப்பிடுங்கள் (ஆப்ரேஷன் வேண்டாம்)

உள்மூலம், வெளிமூலம், சீழ்மூலம், இரத்தமூலம், மூலவாய்வு, மூலப்பவுத்திரம், வயிற்றுப் பொருமல், பசியில்லாமலிருப்பது, மலச்சிக்கல் முதலிய நோய்களை

12 நாள் மருந்தில் பூரண குணப்படுத்துகின்றது.

மூலத்தில்குத்து, எரிச்சல், சீழ், இரத்தம் வருவதையும், பொறுக்கமுடியாமல் அவஸ்தைப் படுவதையும் மூன்றேவேளையில் நிறுத்திவிடும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும். 12 நாள் மருந்து விலை ரூ. 3.

குறிப்பு:—உங்கள் வியாதி எதுவானுலும் சரி எங்கள் வைத்தியசாலைக்கு எழுதுங்கள்.

அரண்மனை வைத்தியர் **S. T. மாணிக்கம் பிள்ளை,**

பழனியாண்டவர் வைத்தியசாலை, அடிவாரம், பழனி. S. I.

குணத்தில் சிறந்தது-மணத்தில் உயர்ந்தது-பஜாரில் புகழ்ந்தது.

அகிலம் புகழும்

ஸ்ரீ. அபிராமி பட்டணம்

பொடியையும், சோப்பையும்

உபயோகியுங்கள். (ஏஜண்டுகள் தேவை.)

ஸ்ரீ. அபிராமி பட்டணம் பொடி.தொழிற்சாலை,
68, நாட்டுபிள்ளையார் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

Edited Printed and Published by P. ALBIN FERNANDO, at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. MADRAS.